# தரிசனங்களும் தீர்க்கதரிசனங்களும்

2

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

# தீர்க்கதரிசனம் 6

## கரடியையும் கலைமானையும் பற்றிய தரிசனம் நிறைவேறுதல்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **அவருடைய வார்த்தையை நிரூபித்தல்,** ஆகஸ்டு 16, 1964, பத்தி எண் 11-43

இன்று காலை சபையோரின் மத்தியில் எங்கோ, என் மிகவும் விலையேறப்பெற்ற நண்பர் சங்கை எட்டி பிஸ்கலும் அவருடைய மனைவியும் பிள்ளைகளும் உள்ளதைக் குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். அவர்கள் இன்று காலை கூட்டத்திற்கு வந்துள்ளனர் என்று நினைக்கிறேன். எட்டி, நீங்கள் இங்கு இருக்கிறீர்களா? நான் நினைத்தேன். நீங்கள் ... நல்லது, ஒருக்கால் வரவில்லை போலும். சகோதரனே, ஓ, ஆமாம், அங்கே... எட்டி, அதுவல்ல "ஆமென்" இடம். நீங்கள் வரவிரும்பினால், போதகர்களாகிய எங்களுடன் மேடையில் அமர்ந்து கொள்ள உங்களை வரவேற்கிறோம். அதன் பிறகு நாங்கள்...

கர்த்தர் எனக்கு கரடியையும் கலைமானையும் குறித்த தரிசனத்தைக் காண்பித்த போது சகோ. எட்டி என்னுடன் இருந்தார், அது... அதை நான் உங்களுக்குக் கூறினது எத்தனை பேருக்கு ஞாபகமுள்ளது? சரி. அவர் அங்கிருந்தார். சகோ. எட்டி பிஸ்கல் தான் கட்டம் போட்ட ஷர்ட் அணிந்திருந்த வாலிபன். அவர் அங்கு நின்று கொண்டிருந்தார்... நான் கேட்டேன்.... அவர்களில் யாராகிலும் கட்டம் போட்ட ஷர்ட் அணிந்துள்ளனரா என்று கேட்டேன். “இல்லை”, யாருமே அணிந்திருக்கவில்லை, நான் “நல்லது, அது ஒருக்கால்... அது கட்டம் போட்ட ஷர்ட்டாக இருக்க வேண்டும். அங்கு வெள்ளி முனை கொண்ட ஒரு பெரிய சாம்பல் நிறக் கரடியும் கொம்புகள் *இப்படி* நாற்பத்திரண்டு அங்குலம் நீளமுள்ள ஒருவிதமான மிருகமும் இருக்கும். அது காண்பதற்கு மானைப் போல் இருந்தது” என்றேன். இது நடப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே இதை இங்கு உரைத்தேன் என்று உங்களுக்குத் தெரியும்; ஓ, அதற்கும் முன்பாக, இந்த ஆண்டின் துவக்கத்தில்...

அதன் பிறகு வேட்டைக்குச் செல்வதற்காக இந்த மனிதனிடமிருந்து அழைப்பைப் பெற்றேன். நான் அந்த மலைப்பிரதேசத்திற்கு முன்பு சென்றிருக்கவில்லை, நாங்கள் சென்ற அந்த இடத்திற்கு. இதை நான் கூறினேன். நாங்கள் சென்ற சிறு பாதை அலாஸ்கா நெடுஞ்சாலையில் உள்ளது. அங்கு மரங்களும் மலைகளும் மிருகங்களும் தவிர வேறொன்றுமில்லை. அன்றிரவு நான் இணைக்கப்பட்ட வண்டியில் **(trailer)** சகோ.பிஸ்கலிடமும் சகோ. சவுத்விக்கிடமும் இதைப் பற்றி கூறினேன். அவர், "நல்லது, நான் - நான்… நாம் ஆடுகள் உள்ள மலைப்பிரதேசத்துக்கு சென்று கொண்டிருக்கிறோம். அது அங்கிருக்காது" என்றார்.

நான், "அது இருக்கும். என்னுடன் இருந்த வாலிபர் ஒருவர் கட்டம் போட்ட ஷர்ட் அணிந்திருந்தார்" என்றேன். அப்பொழுது யாருமே கட்டம் போட்ட ஷர்ட் அணிந்திருக்கவில்லை. சகோ. பிஸ்கல் அணிந்திருக்கவில்லை. மற்றவர்கள் யாருமே அணிந்திருக்கவில்லை.

இரண்டாவது இரவு, மலையில், மரங்கள் வளரும் வரிசைக்கு மேலே, ஒரு ஆட்டுக்கடா எங்கள் கண்களில் பட்டது. அது மிகவும் உயரமான இடத்தில், அங்கு மரங்கள் வளருவதில்லை. அந்த இடத்தில் கலைமான்களும் ஆடுகளும் தவிர வேறொன்றும் இருக்காது. அவைகளில் சிலவற்றை நாங்கள் வழியில் கண்டோம். அன்று பிற்பகல் பாதையில் வந்து கொண்டிருந்தபோது, சகோ. பிஸ்கல் தடுக்கி தண்ணீரில் விழுந்து உடைகளை நனைத்துக் கொண்டார்.

அடுத்த நாள் நாங்கள் நேரத்தோடு எழுந்து, ஆட்டுக் கடாக்கள் எங்களுக்கு கிடைக்கும் என்று நினைத்து அவைகளைத் தேடிச் சென்றோம். அவருடைய... நாங்கள் அங்கு எழுந்து... நாங்கள் பகல் உணவு அருந்தினோம். எங்களுக்கு ஆட்டுக் கடாக்கள் கிடைக்கவில்லை. சகோ. பிஸ்கல் அப்பொழுது ஒரு கலைமானைச் சுட்டார். நான் சுற்றுமுற்றும் பார்த்தேன். பிறகு நாங்கள் மேலேறிச் சென்றோம். சகோ. சவுத்விக் என்னிடம், “நான் நினைக்கிறேன், நாம்... சகோ. பிரான்ஹாமே, நீங்கள் இன்னும் நடக்க விரும்பினால், நாம் இந்த மலையின் மேலேறி

அந்த பள்ளத்தாக்கில் இறங்குவோம். ஆட்டுக்கடாக்கள் அங்கு சென்றிருக்க வழியுண்டு'' என்றார். அது நீண்ட தூர நடை. ஆனால் சீக்கிரம் இருட்டடைவதில்லை, பத்து அல்லது பதினோரு மணியளவில் தான் இருட்டடைவது வழக்கம்.

அது கற்பாறை நிறைந்த மலைகளில் நீண்ட நடை. எனக்கு நடக்கப் பிரியம். நாங்கள் அங்கு ஒருவரொருவர் தோளின் மேல் கைப்போட்டு நின்று கொண்டிருந்தோம். எங்கள் இருவரின் தாடிகளும் நரைத்திருந்தன. நான், "சகோ. பட் (Bud Southwick) என்றாகிலும் ஒரு நாள், ஆயிர வருட அரசாட்சியில் அங்குள்ள மலைகள் அனைத்தின் மேலும் நடப்பேன் என்று நம்புகிறேன்'' என்றேன்.

அவர், "சகோ, பிரான்ஹாமே, அப்பொழுது நான் உங்களுடன் இருப்பேன் என்று நம்புகிறேன்'' என்றார். நாங்கள் நின்று கொண்டு கர்த்தரில் களிகூர்ந்து கொண்டிருந்தோம். எனக்கு மலைகள் என்றால் மிகவும் பிரியம்.

அதன் பிறகு நாங்கள் கீழே இறங்கினோம். அப்பொழுது தான் சகோ. பிஸ்கல் அங்கு கலைமானைச் சுட்டார். அவர் இந்தியர்களுக்கு மிஷனரியாதலால், இதைக் கொண்டு அவருடைய இந்தியர்களைப் போஷிக்க விரும்பினார். எனவே நாங்கள் கீழே சென்று, பகல் உணவு அருந்தி, கலைமானை வெட்டிச் சுத்தம் செய்து, திரும்பி வந்தோம்.

'பட்'டும் நானும் மலையைக் கடந்து சென்று கொண்டிருந்தோம். நாங்கள் சுற்றுமுற்றும் பார்த்தபோது, என் தூரப் பார்வை கண்ணாடியின் மூலம், தூரத்தில், நான் உங்களுக்கு இங்கு கூறியது போன்று, தரிசனத்தில் கண்ட அந்த மிருகத்தை தூரக் காட்சியில் கண்டேன். அங்குள்ள சகோ. பிஸ்கல் எங்கள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தார். நான், "அதோ அந்த மிருகம்" என்றேன்.

அவர் தூரப்பார்வை கண்ணாடியை கண்களின் மேல் வைத்து, "அது பெரிய, முதிய, பிரம்மாண்டமான ஆண் கலைமான்" என்றார்.

நான், "இப்படிப்பட்ட ஒன்றை நான் கண்டதில்லை, இவைகளுக்கு பலகை போன்ற

பரந்த கொம்புகள் (panel horns) இருக்கும் என்றல்லவா எண்ணினேன்'' என்றேன். ஆனால் இந்த மிருகத்திற்கு ஆணி போன்ற நீண்ட கொம்புகள் இருந்தன. நான் தரிசனத்தில் கண்ட விதமாகவே அது காண்பதற்கு வினோதமான ஒன்றாக இருந்தது. இதற்கு முன்பு நான் கலைமானைச் சுட்டதில்லை.

அவர், "நல்லது, கர்த்தர் உங்களுக்கு இதை கொடுத்திருப்பாரானால் அது..." என்றார்.

நான், "ஆம், அது அதுவாகத் தான் நிச்சயம் இருக்க வேண்டும். ஆனால் கட்டம் போட்ட ஷர்ட் யாரும் அணிந்திருக்கவில்லையே என்பதைக் குறித்து தான் நான் வியக்கிறேன்'' என்றேன். நான் சுற்றிலும் பார்த்த போது, சகோ. எட்டி – அவருடைய மனைவி அதை அவருடைய பையில் போட்டிருக்க வேண்டும், அவள் அவருடன் வந்திருந்தாள். முந்தின நாள் அவர் தண்ணீரில் விழுந்து நனைந்த போது, அவர் ஷர்ட்டை மாற்றிக் கொண்டார். அது கட்டம் போட்ட ஷர்ட்டாக இருந்தது. நான், "இதுதான்'' என்றேன்.

நான் சற்று தூரம் சென்று அந்த கலைமானைச் சுட்டபோது, பட் என்னிடம், “சகோ, பிரான்ஹாமே, இந்த கொம்புகள் நாற்பத்திரண்டு அங்குலம் இருக்கும் என்றா சொல்லுகிறீர்கள்?” என்றார்.

“அவை அந்த அளவாகத் தான் இருக்கும்” என்றேன்.

அவர், “அவை தொண்ணூற்றி இரண்டு அங்குலம் இருக்கும் என்பது போல் எனக்குத் தோன்றுகிறது” என்றார்.

நான், “இல்லை, அவை நாற்பத்திரண்டு அங்குலம் மட்டுமே இருக்கும்” என்றேன்.

பட் என்னிடம், “நீங்கள் என்னிடம் கூறின பிரகாரம், நாம் கட்டம் போட்ட ஷர்ட் அணிந்துள்ள இந்த இளைஞர் எட்டியை அடையும் முன்பு (அவர்கள் மலைக்கு கீழே எங்களைச் சந்திக்கக் காத்திருந்தனர், இரண்டு மைல் தூரம்) நீங்கள் சாம்பல் நிறக் கரடியை சுட்டுக் கொல்ல வேண்டும்” என்றார்.

நான், “**அது கர்த்தர் உரைக்கிறதாவது**” என்றேன்.

அவர் “சகோ, பிரான்ஹாமே, அந்த கரடி எங்கிருந்து வரும்? என்னால் ஐம்பது மைல் வரை சுற்றிலும் காண முடியும். அது தென்படவில்லையே” என்றார்.

நான், “அவர் இன்னமும் யோகோவாயீரேயாக இருக்கிறார். கர்த்தர் தமக்கென்று உண்டாக்கிக் கொள்ள முடியும். பாருங்கள். அவரால் அணில்களை சிருஷ்டிக்க முடியும். அவர் ஆபிரகாமுக்காக ஒரு ஆட்டுக்கடாவை சிருஷ்டிக்க வல்லவராயுள்ள போது, அவர் ஒரு கரடியைக் குறித்து உரைத்திருப்பாரானால், அந்த கரடி தோன்ற வழியுண்டு” என்றேன்.

நாங்கள் வேட்டைப் பொருளாகப் பெற்ற அந்த கனமுள்ள கலைமானை மலைக்குக்கீழே கொண்டு வர முயற்சி செய்தோம். சிறிது நேரம் நான் துப்பாக்கியை கையில் பிடித்துக் கொண்டேன், சிறிது நேரம் அவர் பிடித்துக் கொண்டார். இப்படியாக மாறி மாறி பிடித்துக் கொண்டோம். நாங்கள் ஒரு பெரிய பனிக்கட்டி ஆற்றை அடைந்தோம். நாங்கள் அங்கு சென்றோம். அப்பொழுது சற்று

உஷ்ணமாயிருந்தது. எனவே உஷ்ணத்தைப் போக்கிக் கொள்ள நாங்கள் பனிக்கட்டி ஆற்றுக்குச் சென்று சிறிது நேரம் உட்கார்ந்தோம். அப்பொழுது பட், "சகோ. பிரான்ஹாமே, நாம் அந்த இரு வாலிபர்கள் எட்டியும் பிளேய்னும் உள்ள இடத்திலிருந்து ஏறக்குறைய ஒரு மைல் தொலைவில் உள்ளோம். அந்த கரடி தென்பட்டால் நலமாயிருக்கும்" என்றார்.

நான், "பட், நீங்கள் அதை சந்தேகிப்பதாக எண்ணுகிறேன்" என்றேன்.

அவர், "சகோ, பிரான்ஹாமே, என் சகோதரன் அநேக ஆண்டுகளாக வலிப்பு நோயால் பீடிக்கப்பட்டிருந்தான். முதன் முறையாக நாம் வேறொரு இடத்துக்கு வேட்டைக்காக சென்றிருந்த போது, காண்பதற்கு அவன் எப்படியிருப்பான் என்று நீங்கள் என்னிடம் கூறினீர்கள்" என்றார். கர்த்தர் அந்த தரிசனத்தை எனக்கு அருளின போது, எட்டி என் பக்கத்தில் குதிரை மேல் சவாரி செய்து வந்தார். அந்த பையனுக்கு என்ன செய்ய வேண்டுமென்று அவர்களிடம் கூறினேன். அப்பொழுது வலிப்பு

நின்றது. எனவே பட், "ஆகவே இதை என்னால் சந்தேகிக்க முடியாது" என்றார்.

நான், "பட், அந்த கரடி எங்கிருந்து வருகிறது என்று எனக்கு தெரியாது" என்றேன். அந்த தரிசனத்தை நான் கண்டபோது எனக்கு ஏறக்குறைய ஐம்பது வயது, இப்பொழுது எனக்கு ஐம்பத்தைந்து வயது ஆகின்றது, எனவே அது ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு முன்பு. அப்பொழுது எனக்கு ஐம்பத்திரண்டு அல்லது ஐம்பத்து மூன்று வயதிருக்கும். நான் அவரிடம், "தரிசனம் ஒரு முறையாவது தவறினதை நான் கண்டதில்லை. அந்த வாலிபர் உள்ள இடத்தை நாம் அடையும் முன்பு, தேவன் எனக்கு அந்த சாம்பல் நிறக் கரடியைத் தருவார்" என்றேன். நாங்கள் மரம் வளருகின்ற பகுதியை ஏறக்குறைய அடைந்தோம். அங்கு சிறிய ஊசியிலை மரம் வளர்ந்திருந்தது.

நாங்கள் மலையில் சிறிது கீழே இறங்கின போது, அடர்த்தியான மரங்களுக்குள் சென்றோம். பட் அங்கு உட்கார்ந்தார். அவர் தான் வேட்டை பொருளை சுமந்து கொண்டு வந்தார். நான் துப்பாக்கியைப் பிடித்திருந்தேன். அவர், "அந்த

கரடி தென்பட்டால் நலமாயிருக்கும், இல்லையா?'' என்றார்.

நான், ''அது தென்படும். கவலைப்படாதீர்'' என்றேன்.

அவர், ''நான் ஒவ்வொரு மலையையும் பார்த்துவிட்டேன்'' என்றார்.

நான். ''நான்... ஆனால் நான் வாக்குத்தத்தத்தைக் காண்கிறேன்'' என்றேன். பாருங்கள்? பாருங்கள், அவர் வாக்குத்தத்தம் செய்தார். நான், ''அவர் உரைத்த எதுவும்...'' என்று சொல்லி விட்டு, ''பட், அங்கு உட்கார்ந்திருப்பது என்ன?'' என்று கேட்டேன்.

அவர் பார்த்துவிட்டு, ''அது பெரிய வெள்ளி முனைக் கொண்ட சாம்பல் நிறக் கரடி. அது தான்'' என்றார். நாங்கள் அந்த கரடியைச் சுட்டுவிட்டு திரும்பி வந்த போது... நான் உங்களிடம் உரைத்த அந்த தரிசனத்தில், அந்த துப்பாக்கியைக் குறித்து பயந்தது எனக்கு ஞாபகம் வந்தது. அது சிறிய .270 துப்பாக்கி, சிறிய தோட்டாக்கள், பாருங்கள், அது ஒலிநாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. தரிசனம் உரைத்த விதமாகவே, ஏறக்குறைய ஐந்நூறு கெஜ தூரத்தில்

அந்த கரடியை சுட்டுவீழ்த்தினேன். பட் என்னிடம் "நீங்கள் அந்த கரடியின் முதுகில் சுடுங்கள். இதற்கு முன்பு நீங்கள் சாம்பல் நிறக் கரடியை சுட்டு கொன்றிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

நான், "இல்லை" என்றேன்.

அவர், "அவைகளுக்கு மரணம் என்றால் என்னவென்று தெரியாது" என்றார். அதைக்குறித்து நான் பிறகு அறிந்து கொண்டேன். அவர், "அவை அதிர்ச்சியை தாளமாட்டா. எனவே நீங்கள் அதை சுட்டுக் கொன்று போட வேண்டும்" என்றார்.

நான், "அந்த தரிசனத்தின்படி அதை நான் இருதயத்தில் சுட்டேன்" என்றேன்.

அவர், "தரிசனம் அவ்வாறு உரைத்திருந்தால், அதை நான் ஆதரிக்கிறேன்" என்றார்.

நான், "இதோ நாம் செல்வோம்" என்று சொல்லி விட்டு, நாங்கள் சிறிது அருகில் சென்றறோம். நான் துப்பாக்கியை உயர்த்தினபோது, கரடி என்னைக் கண்டது. என்னைத் தாக்க அது தான் அதற்கு

தேவையாயிருந்தது. நான் கரடியைச் சுட்டேன். அது காயப்பட்டது போல் கூட எனக்குத் தோன்றவில்லை. அது என்னை நோக்கி வந்தது. துப்பாக்கியில் நான் வேறொரு தோட்டாவை நிறைப்பதற்கு முன்பு, அது 'பட்'டுக்கு ஐம்பது கெஜ தூரத்தில் செத்து விழுந்தது.

'பட்'டின் முகம் வெளுத்தது. அவர், "சகோ, பிரான்ஹாமே, அது என் மடிக்கு வந்து தாக்குவதை நான் விரும்பியிருக்க மாட்டேன்" என்றார்.

"நானும் கூட" என்றேன்.

பட், "நீங்கள் அதை சுட்டுக் கொன்றதாக அந்த தரிசனம் உரைத்ததற்காக எனக்கு மிக்க மகிழ்ச்சி. இப்பொழுது அந்த கலைமானின் கொம்புகள் நாற்பத்திரண்டு அங்குலம் இருக்குமானால்" - அவர் சொன்ன விதமாக அதைக் கூறுகிறேன் - "நான் அலறுவேன்" என்றார்.

நான், "இப்பொழுதே அலறுங்கள், ஏனெனில் அதன் நீளம் அதுவாகத் தான் இருக்கும்" என்றேன்.

நாங்கள் சகோ. எட்டியை அடைந்தபோது அவரிடம் சொன்னேன்... நாங்கள் குதிரைகளைக் கட்டிப் போட்டோம். அவைகளுக்கு கரடி என்றால் பயம். ஓ, என்னே, அவை கரடியின் மணத்தை முகர்ந்து விட்டன. அதிக நேரமாகி விட்டதால் கரடியின் தோலை எங்களால் உரிக்க முடியவில்லை. அதற்காக அடுத்த நாள் நாங்கள் வரவேண்டியதாயிற்று. கட்டப்பட்ட குதிரைகளின் கயிறு பத்து முறை அறுந்து விட்டது. குதிரைகள் எல்லாவிடங்களிலும் ஓடின. நாங்கள் அங்கு அடைந்த போது, பட் சொன்னார்... அவர் சென்று தன் பையிலுள்ள அளவு நாடாவை (tape measure) எடுத்து, “பிளேயின்” என்று கூப்பிட்டார்.

நான் சகோ, எட்டியிடம், “அந்த சிறு கையை கவனியுங்கள்” என்றேன். அது பில்லி பாலின் சிறு கை கொம்பின் அருகில் அளவு நாடாவை பிடித்திருப்பது போல் எனக்கு தோன்றினது. நான், “அந்த சிறு கையை கவனியுங்கள்” என்று கூறிவிட்டு சகோ. எட்டியை விளையாட்டாகக் குத்தினேன். நாங்கள் பின்னால் காலடி வைத்தோம். அவன் அளவு நாடாவை

*இப்படி* பிடித்த போது, அது சரியாக நாற்பத்திரண்டு அங்குலமாக இருந்தது. பாருங்கள், சரியாக. இயேசு ஒரு போதும் தவறுவதில்லை. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து வரும் வரைக்கும், அது தவறவே முடியாது.

★★★★★

# தீர்க்கதரிசனம் 9

## லாஸ் ஏஞ்சலிஸ் பட்டணத்திற்கு தீர்க்கதரிசனம்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# லாஸ் ஏஞ்சலிஸ் பட்டணத்திற்கு தீர்க்கதரிசனம்

# (PROPHECY TO LOS ANGELES)



**வில்லியம் பிரான்ஹாம் அவர்கள் லாஸ் ஏஞ்சலிஸ் தண்ணீருக்குள் மூழ்கிவிடும் என்று தீர்க்கதரிசனம் உரைத்த பில்ட்மோர் ஓட்டல்** (Biltmore Hotel in Los Angeles). **இந்த ஓட்டல் லாஸ் ஏஞ்சலிஸ் பட்டணத்தில் அமைந்துள்ளது. முழு சுவிசேஷ வர்த்தக புருஷரால் ஒழுங்கு பண்ணப்பட்டிருந்த இந்த கூட்டத்தில் தான் தீர்க்கதரிசி வில்லியம் பிரான்ஹாம் 1965-ம் ஆண்டு ஏப்ரல் 29 மாலையில் "மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல்** (Choosing of a Bride)" **என்ற செய்தியில் லாஸ் ஏஞ்சலிஸ் பட்டணத்திற்கு விரோதமாக தீர்க்கதரிசனம் உரைத்தார்.**

---

*இயேசு, "ஓ, வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலும் கொமோராவிலும் செய்யப்பட்டிருந்ததானால், அவை இந்தநாள் வரைக்கும் நிலைத்திருக்கும்" என்றார். (மத் 11:23). சோதோமும் கொமோராவும் உப்புக் கடலின்* (Dead sea) *அடியில் மூழ்கிவிட்டன.*

கப்பர்நகூமும் கடலின் அடியில் மூழ்கி விட்டது.

தேவதூதர்களின் (Angels) பட்டினம் என்று உரிமை கொண்டாடும் பட்டினமே (சகோ. பிரான்ஹாம் லாஸ் ஏஞ்சலிஸை குறிப்பிடுகிறார் – தமிழாக்கியோன்), நீ உன்னை வானபரியந்தம் உயர்த்தி ஆபாசமான நாகரீகத்தை உலகிற்கு அனுப்பி, வெளிநாடுகளும் கூட இங்கு வந்து நமது ஆபாசத்தை ஏற்றுக் கொண்டு அதை வெளியில் அனுப்புகின்றன. நீ அழகான ஆலயங்கள், கூர்கோபுரங்கள் போன்றவைகளைக் கொண்டிருக்கிறாய். நீ புரியும் செயல்கள் ஒருநாளில் நீ இந்த கடலின் அடியில் மூழ்கிவிடுவாய் என்பதை ஞாபகம் கொள். அந்த பெரிய தேன்கூடு இப்பொழுதே உன் அடியில் உள்ளது. தேவனுடைய கோபாக்கினை உனக்குக் கீழே கக்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் எவ்வளவு காலம் தான் அவர் அந்த மணல் தடையை (sand bar) பிடித்து வைத்திருப்பார்? ஒரு மைல் ஆழமுள்ள அந்த

*சமுத்திரம் கடந்து வந்து, சால்டன் கடலில்* (Salton Sea) *தள்ளி விடும். பாம்பே* (Pompeii) *பட்டினத்தின் கடைசி நாட்களைக் காட்டிலும் இது பயங்கரமானதாக இருக்கும். லாஸ் ஆஞ்சலிஸே, மனந்திரும்பு! மற்றவர்களாகிய நீங்களும் மனந்திரும்பி, தேவனிடத்திற்கு திரும்புங்கள். கோபாக்கினையின் நேரம் பூமியின் மேல் உள்ளது. சமயம் உள்ள போதே தப்பி ஓடி கிறிஸ்துவுக்குள் வாருங்கள்.*

**மணவாட்டியைத் தெரிந்துகொள்ளுதல், ஏப்ரல் 29, 1965, பத்தி எண் 230–232**

*ஆட்டுக்குட்டியானவர் எந்த நேரத்திலும் பிரகாரத்தை விட்டு, பலியானது வைக்கப்பட்டுள்ள தேவனுடைய சிங்காசனத்தை விட்டு புறப்பட்டு வரக்கூடும். அப்பொழுது எல்லாம் முடிவடையும், அதன் பின்னர் இவ்வுலகிற்கு விமோசனமில்லை. அவள் ஏமாற்றம் கொண்டு, இயேசுவின் உயிர்த்தெழுதலின்போது நிகழ்ந்தவாறு, பூமியதிர்ச்சிகளுக்கு ஆளாவாள்.*

கிறிஸ்து கல்லறையை விட்டு எழுந்ததுபோல, பரிசுத்தவான்கள் எழும்போது, அதே காரியம் சம்பவிக்கும். கர்த்தாவே, அது எந்த நேரத்திலும் நிகழும். அந்த சந்தோஷகரமான நாளை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**ஆறாம் முத்திரை, மார்ச் 23, 1963 மாலை, பத்தி எண் 392–393**

அந்த நேரத்தில் நான் திரும்பிப் பார்த்தேன்... இப்பொழுது இங்கு உட்கார்ந்திருக்கிற ஒருவர் அன்று அங்கு நின்று கொண்டிருந்தார். நான் ராய் பார்டர்ஸிடம்... இல்லை ராய் ராபர்ஸன் தோள் மேல் என்கையை போட்டு – அவர் முன்னாள் போர் வீரன் – “சகோ. ராய், எங்காவது வேகமாக ஏதாவதின் கீழ் ஒளிந்து கொள்ளுங்கள். ஏதோ ஒன்று நடக்கவிருக்கிறது” என்றேன்.

அவர், “சகோ. பிரான்ஹாமே, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?” என்றார்.

நான், "பேசாதீர்கள், போய் வேகமாக ஏதாவதின் கீழ் ஒளிந்து கொள்ளுங்கள்" என்றேன். நான் பக்கத்தில் இருந்த நீண்ட பிடி மண்வெட்டியை (shovel) கையிலெடுத்துக் கொண்டு, அவர்களை விட்டு நடந்து சென்றேன். ஏனெனில் நான் இருக்கும் இடத்தில் தான் அது சம்பவிக்கும் என்று அறிந்திருந்தேன்.

அதன் பக்கத்தில் ஒரு பெரிய மலைக்கணவாய் இருந்தது. அது இந்தக் கட்டிடத்தைக் காட்டிலும் எட்டு அல்லது பத்து மடங்கு உயரமிருக்கும். அது "பெட்டி" மலைக்கணவாய். வானத்திலிருந்து தீயைப் போல், சுழல்காற்றைப் போல் ஒன்று இறங்கி வந்து, நான் நின்று கொண்டிருந்த இடத்துக்கு சில அடி உயரத்தில் மலையிலிருந்து கற்களைப் பெயர்த்து, ஊடுருவி நூறு கெஜம் வரைக்கும் சென்று, அங்கிருந்த மரங்களின் உச்சியை எரித்துப் போட்டது. எல்லோரும் ஓடி மோட்டார் வாகனங்களின் கீழ் ஒளிந்து கொண்டனர். அது மறுபடியும் மேலே சென்று, ஒரு பெரிய இடிமுழக்கம்

உண்டாக்கி, வானத்துக்குச் சென்று, மறுபடியும் கீழே வந்தது. இப்படியாக மூன்று முறை நடந்தது. இதெல்லாம் முடிந்த பின்பு, அவர்கள் என்னிடம் வந்து, "இதன் அர்த்தம் என்ன?" என்றனர்.

நான், "உங்களிடம் இதை கூற விரும்புகிறேன். இது நியாயத்தீர்ப்பின் அடையாளம். இன்னும் சில நாட்களில், ஒரு பெரிய பூமியதிர்ச்சி மேற்கைத் தாக்கும். அது அத்துடன் நின்று விடாது. கலிபோர்னியா, லாஸ் ஏஞ்சலிஸ் ஒரு நாள் தண்ணீரில் மூழ்கும். அது வழுக்கி தண்ணீருக்குள், போய்க் கொண்டேயிருக்கிறது" என்றேன். இரண்டு நாட்கள் கழித்து, அலாஸ்கா பூமியதிர்ச்சி அலாஸ்காவை அசைத்தது.

நான் கலிபோர்னியாவில் கடைசியாக நடத்தின கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கையில், நான் தெருவில் செல்லும் வரைக்கும் என்ன நடந்ததென்று எனக்கே தெரியவில்லை. அது கலிபோர்னியாவைக் குறித்து, "கப்பர்நகூமே, கப்பர்நகூமே, தூதர்களின் பெயரை

வைத்துள்ள நகரமே (அது லாஸ் ஏஞ்சலிஸ்), உன்னை வானபரியந்தம் உயர்த்திக்கொண்டாய். நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய். உன்னில் செய்யப்பட்ட பலத்த கிரியைகள் சோதோமில் செய்யப்பட்டிருந்தால், அது இன்று வரைக்கும் நின்றிருக்கும்" என்றது.

கடைசி சில நாட்களாக நடந்த மகத்தான முழக்கமும் குதித்தலும். அதன்பிறகு விஞ்ஞான சம்பந்தமான ஒரு பத்திரிகை வெளியாகி, "அது தேன் கூடுபோல் ஆகிவிட்டது. அது தண்ணீருக்குள் செல்ல வேண்டும்" என்றது. அவர்கள் அதை அறிந்துள்ளனர்.

நீங்கள் கவனித்துக் கொண்டே வாருங்கள். தண்ணீர் சால்டன் கடலுக்குள் புகுந்து விடும். லாஸ் ஏஞ்சலிஸ் மேல் நியாயத்தீர்ப்பு விதிக்கப்பட்டு விட்டது. அது நடப்பதற்கு முன்பே உங்களுக்கு அறிவிக்கிறேன். அது நடக்கும்போது நீங்கள் அறிந்து கொள்வீர்கள். இதை நானாக கூறவில்லை. அவர் இதுவரை கூறின ஒன்றும்

நடக்காமல் போனதில்லை. அது உண்மை. அது எப்பொழுது நடக்கும்? எனக்குத் தெரியாது.

நான் வெளியே சென்றபோது, நான் கூறினது என்னவென்று அவர்கள் என்னிடம் கூறினார்கள். நான் கவனித்துக் கேட்டு, திரும்பிச் சென்று, வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தேன். கப்பர்நகூமைக் குறித்து பேசும்போது இயேசு ஏறக்குறைய அதே வார்த்தைகளை உபயோகித்தார். சோதோமும் கொமோராவும் உப்புக்கடலின் கீழ் சென்று விட்டன. இயேசு கப்பர்நகூமைக் குறித்து உரைத்தபோதே அவை உப்புக்கடலில் மூழ்கியிருந்தன என்று நினைக்கிறேன். அவர் உரைத்து ஏறக்குறைய நூறு ஆண்டுகள் கழித்து கப்பர்நகூம் தண்ணீருக்குள் வழுக்கிச் சென்றது. அது இப்பொழுது கடலுக்குள் உள்ளது. சோதோமின் பாவங்களுக்காக அதை தண்ணீருக்குள் முழுக்கின அதே தேவன், கப்பர்நகூமின் பாவங்களுக்காக அதை தண்ணீருக்குள் முழுக்கின அதே தேவன், லாஸ் ஏஞ்சலிஸின் பாவங்களுக்காக அந்த

*சீர்கேடான நகரத்தை தண்ணீருக்குள் முழுக்குவார்.*

**விசுவாசத்தை வெளிப்படுத்துவது கிரியைகள், நவம்பர் 26, 1965, பத்தி எண் 56–64**

**கலிபோர்னியாவில் நான் கடைசியாக அளித்த செய்தி என் நினைவுக்கு வருகின்றது. நான் மறுபடியும் அங்கு போகமாட்டேன் என்று நினைத்தேன். லாஸ் ஏஞ்சலிஸ் கடலுக்குள் ஒரு நாள் மூழ்கி விடும் என்று நான் அங்கு முன்னறிவித்தேன். அது கர்த்தர் உரைத்ததாவது! ஆகவே அது நிச்சயம் நிறைவேறும். அவளுடைய முடிவு நெருங்கி விட்டது. அது எப்பொழுது நேரிடும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அது நிகழுமென்பது உறுதி. நான் அவ்விதம் உரைத்தபின்பு நிலநடுக்கங்கள் உண்டாகி அந்தப் பட்டினத்தை அசைத்தன.**

*தூதன் இறங்கி வந்தபோது உங்களில் சிலர் அந்தக் குன்றின் மேல் நின்று கொண்டிருந்தீர்கள். அப்பொழுது வெளிச்சம் உண்டாகி, நாம் நின்று கொண்டிருந்த*

குன்றைச் சுற்றிலும் அக்கினி விழுந்தது. அப்பொழுது கற்பாறைகள் பிளவுபட்டு, உடைந்து, நம்மைச் சுற்றிலும் விழுந்தன. மூன்று முறை வானத்திலிருந்து இடிமுழக்கம் உண்டானது. அப்பொழுது நான், "மேற்கு கடற்கரையின் மேல் நியாயத்தீர்ப்பு விழும்" என்று அறிவித்தேன். இரண்டு நாட்கள் கழித்து அலாஸ்கா ஏறக்குறைய தண்ணீரில் மூழ்கிவிட்டது.

**இதை உரைத்த அதே தேவன், "லாஸ் ஏஞ்சலிஸ் அழிந்து விடும்" என்று உரைத்துள்ளார். அது எப்பொழுது நேரிடும் என்று என்னால் கூற முடியாது.**

கப்பர்நகூமைக் குறித்து ஆண்டவர் கூறினதை அப்பொழுது நான் யோசித்துக் கூட பார்க்கவில்லை. நான் வேதபுத்தகத்தைத் திறந்து இயேசு கூறினதைப் படித்தேன்; "வான பரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள்

*வரைக்கும் நிலைத்திருக்கும்" (மத். 11:23). அது உரைக்கப்பட்டு 150 ஆண்டுகளுக்குப் பின்னர், கப்பர்நகூம் தண்ணீரில் மூழ்கினது.*

*இவையனைத்தும் உரைத்து நிறைவேற்றின அதே தேவ ஆவியானவர், "தூதர்களின் பெயரை (லாஸ் ஏஞ்சலிஸ்) சூடிக்கொண்டிருக்கும் கப்பர்நகூமே, நீ எவ்வளவாக உன்னை வானபரியந்தம் உயர்த்திக் கொண்டாய்! நீ சாத்தானின் உறைவிடமாக இருக்கின்றாய்.*

*போதகர்களின் கல்லறைத் தோட்டமாக நீ அமைந்திருக்கிறாய். நல்லவர்கள் உன்னிடம் வந்தால் அவர்கள் எலிகளைப் போல் மாண்டு போகின்றனர். உனக்கு என்ன நேர்ந்தது?*

**தூதர்களின் பெயரால் உன்னை அழைத்துக் கொள்பவளே! உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமில் செய்யப்பட்டிருந்ததானால், அது இன்று நிலைத்திருக்கும். உன் நேரம் வந்து விட்டது" என்று கூறுகின்றார். நான் கூறினது**

**நிறைவேறாமல் போனால், என்னைக் கள்ளத் தீர்க்கதரிசியாகக் கருதுங்கள்.**

**ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்,**
**டிசம்பர் 4, 1965, பத்தி எண் 191–197**

*"அவர்கள் பரிதபிக்கப்படத் தக்கவர்களாயிருக்கின்றனர்" என்றாலும் அவர்களிடம் காண்பிக்கப்படும் பரிதாபத்தை அவர்கள் இகழ்ந்து, பெருமையுள்ளவர்களாயிருக்கின்றனர். அவர்களிடமுள்ளதைக் குறித்து அவர்கள் பெருமை பாராட்டுகின்றனர். ஆனால் இவையனைத்தும் அதிக காலம் நீடிக்காது. தேவனுடைய கோபாக்கினையாகிய புயல்காற்று வீசும். அப்பொழுது அழிவு சடுதியாய் அவர்கள் மேல் வரும். மாம்சத்துக்குரிய பிரகாரமாய் அவர்கள் செய்த ஆயத்தமனைத்தும் வீணாகும். இவ்வுலகத்தில் நேரிடுபவைகளுக்கு அவர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ளாத நிலையில் இருப்பார்கள். அவர்கள் உண்மையாகவே பரிதபிக்கப்படத்தக்கவர்கள். உலக சபைகளின் ஐக்கியத்தில் பங்கு கொள்பவர்களுக்காக நாம்*

அனுதாபப்பட வேண்டும். அது தேவனுடைய அசைவு என்று எண்ணிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் உண்மையில் அது சாத்தானின் இயக்கமாயிருக்கிறது.

**லவோதிக்கேயா சபையின் காலம், ஏழு சபை காலங்களின் வியாக்கியானம்**

அது இரகசியமாக நிகழும், ஏனெனில் அவர், “இரவில் திருடன் வருகிறவிதமாய்” வருவார். நாம் எடுக்கப்படுதலைக் குறித்து அவர் ஏற்கனவே நமக்குக் கூறிவிட்டார்.

எடுக்கப்படுதல் சம்பவித்த பிறகு நியாயத்தீர்ப்பு - பாவம் – வாதைகள் - வியாதிகள் போன்றவை - விழுமென்று அவர் ஏற்கனவே நமக்கு சொல்லியிருக்கிறார். நியாயத்தீர்ப்பின் கோரத்தினின்று தப்பித்துக் கொள்ள ஜனங்கள் மரித்துப்போக ஆசிப்பர். `ஆண்டவரே, முதலில் எடுக்கப்படுதல் சம்பவிக்கவேண்டுமே! பின்னை ஏன் இந்த நியாயத்தீர்ப்பு இப்பொழுது எங்கள்மேல்

*விழ வேண்டும்?' என்று அவர்கள் கூக்குரலிடுவர்.*

*அவர் அதற்கு, `எடுக்கப்படுதல் ஏற்கனவே சம்பவித்துவிட்டது. நீங்கள் அதை அறியவில்லை' என்பார். பாருங்கள்? தேவன் எளிமையில் மறைந்திருக்கிறார். ஓ, என்னே! அது சரி. "அது ஏற்கனவே சம்பவித்துவிட்டது. நீங்கள் அதை அறியவில்லை."*

**தேவன் எளிமையில் மறைந்திருந்து அதன்பின் அவ்விதமே தம்மை வெளிப்படுத்துதல், மார்ச் 17, 1963 காலை, பத்தி எண் 380–382**

*ஒரு நாளிலே ஃபீனிக்ஸில் ஒரு கல்லின் மேல் கல்லிராதபடிக்கு எல்லாம் அகற்றப்பட்டிருக்கும். பள்ளத்தாக்குகளெல்லாம் பெருக்கி சுத்தமாக்கப்பட்டிருக்கும்.*

**எல்லாவற்றையும் விட்டுவிடுதல் ஜனவரி 23, 1962, பத்தி எண் 267**

*ஒருநாள் இங்கிலாந்து தண்ணீரில் மூழ்கிவிடும் என்று நான் நினைக்கிறேன்.*

அது அவளுக்கு தகுதியுள்ளதாகும். அசுத்தம், குப்பை, அழகு... இங்கிலாந்து உலகின் நெறி தவறிய சாக்கடை நீர் தேக்கமாக திகழ்கின்றது. என் வாழ்க்கையில் நான் இதுவரை கண்டவர்களில், வேதத்தை அதிகமாக மறுதலிப்பவர்கள் இங்கிலாந்து நாடாகும்.

**காலத்தையும் அதன் செய்தியையும் அடையாளம் கண்டு கொள்ளுதல், ஜூலை 26, 1964 காலை, பத்தி எண் 147**

இப்பொழுது, பாவமாகிய தடைகளெல்லாம் (sin barrier), பூமிக்கடியில் முழங்கி, அவள் மூழ்கிக் கொண்டிருக்கிறாள். லாஸ் ஏஞ்சலிஸ், ஹாலிவுட் ஆகிய ஸ்தலங்கள் ஒவ்வொரு மணி நேரமும் பல அங்குலங்கள் கணக்கில் மூழ்கிக் கொண்டிருக்கின்றன, அதைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆம், நாம் இந்த அளவுக்கு வந்துவிட்டோம். எந்த வேளையிலும் அழைப்பை நாம் கேட்போம்.

**இப்பொல்லாத காலத்தின் தேவன், ஆகஸ்ட் 1, 1965, பத்தி எண் 192**

லவோதிக்கேயா பட்டினத்தில் அநேக பூகம்பங்கள் உண்டாகி, கடைசியில் ஏற்பட்ட பூகம்பம் அதை முழுவதும் சேதப்படுத்தியது. அவ்வாறே, இந்தக் கடைசி காலத்தில், பழைய வேசியோடு காதல் புரியச் சென்ற உலகத்தைக் கர்த்தர் அசைத்து அதை நிர்மூலமாக்குவார். உலகத்தாரால் ஏற்பட்ட ஸதாபனங்கள் அழிவது மாத்திரமல்ல. இந்தப் பூமியும் பூகம்பத்தினால் அழிந்து கிறிஸ்துவின் ஆயிர வருஷ அரசாட்சிக்கென புதுப்பிக்கப்படும்.

**லவோதிக்கேயா சபையின் காலம், ஏழு சபை காலங்களின் வியாக்கியானம்**

நான் அங்கிருந்த போது, ஏதோ ஒன்று என்னைத் தாக்கியது. முப்பது நிமிடங்கள் எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. ஒரு தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. சகோ.மாஸ்லி, மற்றும் பில்லி, முதலாவது நான் நினைவுக்கு வந்த போது, நான் தெருவில் நடந்து கொண்டிருந்தேன். அது, “தூதர்களின் பெயரால் உன்னை அழைத்துக்கொள்ளும் கப்பர்நகூமே!” என்றது.

அது லாஸ் ஏஞ்சலிஸ், தூதர்களின் (angels) பட்டினம் பாருங்கள், தூதர்கள். “வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்.” இவையாவும் எனக்கு நினைவு இல்லாமலிருந்தபோதே. பாருங்கள்?

நான் எவ்வளவாக கிறிஸ்துவை உயர்த்தி சபைக்குச் சொல்ல ஆரம்பித்தேன்! நான், “ஸ்திரீகளே, நான் எவ்வளவாக உங்களிடம் வந்து இவைகளுக்கு விரோதமாக பிரசங்கித்தபோதிலும்; மனிதர்களே, போதகர்களே, நீங்கள் எப்பொழுதும் அதை நிராகரித்து, அதை செய்துகொண்டே வந்தீர்கள், தேவனுடைய வார்த்தை ஒன்றுமற்றது என்பது போல் அதை மிதித்து போடுகின்றீர்கள்” என்றேன்.

எனக்கு நினைவு வந்தபோது நான், “அப்படிப்பட்ட ஒரு வேதவாக்கியம் இருக்கிறதே” என்று சொல்லி அதை

தேடினேன். அது இயேசு கடற்கரையிலிருந்த கப்பர்நகூமைக் கடிந்து கொள்வதாகும். அன்றிரவு நான் வேதவாக்கியங்களை ஆராய்ந்தேன், வீட்டுக்கு வந்து சரித்திர புத்தகங்களைப் படித்தேன். சோதோம் கொமோரா ஒரு காலத்தில் செழிப்புள்ள பட்டினமாகத் திகழ்ந்தது. அது உலகில் புறஜாதியாரின் தலைமை ஸ்தலமாக விளங்கினது. உங்களுக்குத் தெரியுமா? அந்த பட்டினம் பூமியதிர்ச்சியின் விளைவாக உப்புக் கடலுக்குள் (Dead Sea) மூழ்கினது. இயேசு அங்கு நின்று கொண்டு, "கப்பர்நகூமே, உன்னில் செய்யப்பட்ட செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும். நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்பட வேண்டும்" என்றார். அவர் தீர்க்கதரிசனம் உரைத்து இருநூறு அல்லது முன்னூறு ஆண்டுகள் கழித்து, மற்ற கடற்கரை பட்டினங்கள் ஒவ்வொன்றும் அப்படியே நிலைத்திருந்த போது, கப்பர்நகூம் மாத்திரம் கடலுக்கடியில் மூழ்கி விட்டது,

பூமியதிர்ச்சி ஒன்று அதை கடலுக்குள் மூழ்கடித்து விட்டது.

பிறகு, “லாஸ் ஏஞ்சலிஸ் கடலுக்கடியில் மூழ்கிவிடும்” என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. நான் வீடு திரும்பி, பின்பு, ஆப்பிரிக்காவுக்கு சென்றேன். நான் ஆப்பிரிக்காவில் இருந்த போது, லாஸ் ஏஞ்சலிஸில் பூமியதிர்ச்சி உண்டானது. விஞ்ஞானிகள்... நீங்கள் அதைப் பார்த்திருப்பீர்கள், அது தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது. லாஸ் ஏஞ்சலிஸில் சில பெரிய, அழகிய வீடுகள் இடிந்துபோயின – ஒரு விடுதியும் (motel) கூட, இப்பொழுது அங்கு...

அந்த பூமியதிர்ச்சி நேர்ந்த முதற்கு, இரண்டு அல்லது மூன்று அங்குலம் அகலமுள்ள ஒரு பிளவு பூமியில் உண்டாகியுள்ளது. அது அலாஸ்காவில் தொடங்கி, அலூசியன் தீவுகளைச் சுற்றி வந்து, கடலுக்குள் சுமார் நூறு அல்லது நூற்றைம்பது மைல்கள் தூரம் சென்று, மறுபடியும் சான்டியாகோவுக்கு வந்து

கலிபோர்னியா அல்லது லாஸ் ஏஞ்சலிஸை அடைந்து, மறுபடியுமாக கலிபோர்னியாவின் வடபாகத்தின் கீழ் சான்ஜோஸ் என்னும் சிறிய இடத்திற்கு வந்துள்ளது.

இந்த விஞ்ஞானி, அவரைப் பேட்டி கண்டபோது பேசினார். நாங்கள் அதைத் தொலைக்காட்சியில் கண்டோம். அவர், "அதன் கீழ் சுழலும் பாறைக் குழம்பு (Lava) உள்ளது" என்றார். அவர் மேலும், "அந்த துண்டிக்கப்பட்ட பகுதி (Chunk) உடைந்து வந்து விடும்" என்றார்.

இந்த தலைமை விஞ்ஞானியை பேட்டி கண்ட விஞ்ஞானி, "அப்படியானால் அது மூழ்கி விடுமா?" என்று கேட்டதற்கு, அவர், "மூழ்கி விடுமா என்ன? அது மூழ்கத்தான் வேண்டும்" என்று பதிலளித்தார்.

"ஆனால் அது அநேக ஆண்டுகள் கழித்து நடக்கும்" என்றார்.

அவர், "ஒருக்கால் அது இன்னும் ஐந்தே நிமிடங்களில் நடக்கலாம், அல்லது ஐந்து

ஆண்டுகள் ஆகலாம்" என்றார். அவர் அதற்கு ஐந்து ஆண்டுகள் சமயம் கொடுத்தார்.

நான் நிச்சயமாக பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் அங்கு நின்று கொண்டிருந்தபோது, அது மேற்கு கடற்கரைக்கு நியாயத்தீர்ப்பைக் கொண்டு வந்தது, அதைத் தொடர்ந்து லாஸ் ஏஞ்சலிஸ் மூழ்கும் தருவாயில் உள்ளது. அவள் போய்விட்டாள்! அது உண்மை. அது நிகழ்ந்தே தீரும். எப்பொழுது? எனக்குத் தெரியாது.

ஓ, என்ன நேர்ந்தது? இப்பொழுது நமக்கு ஆறு கண்டங்கள் மாத்திரமேயுள்ளன. நமக்கு ஏழு இருந்தன, ஆனால் ஒன்று ஆப்பிரிக்காவுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கும் நடுவில் மூழ்கி விட்டது. ஓ, அது சரித்திர ஆதாரமானது. அது உங்களுக்குத் தெரியும். லாஸ் ஏஞ்சலிஸ் தண்ணீரில் மூழ்குமானால், அதை நீங்கள் கவனித்து வரவேண்டுமென்று விரும்புகிறேன்.

சகோ. எலைஜ் பெர்ரி இங்கு மூப்பராக இருந்தபோது, இந்த பிரசங்கத்தை நான் நிகழ்த்தினேன் என்று நினைக்கிறேன். "அந்த சமயம் வரும்..." என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. திருமதி. சிம்ப்சன் அந்த பிரசங்கத்தை என்னிடம் அன்றொரு நாள் கொண்டு வரும் வரைக்கும், அதை அறியாதிருந்தேன். அதை ஒரு சிறு புத்தகத்தில் எழுதி வைத்துக் கொண்டேன்... "சமுத்திரம் அழுது கொண்டே வனாந்தரத்தை அடையும்." அது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு கூறப்பட்டது.

சால்டன் கடல், கடல் மட்டத்திற்கு இருநூறு அடி கீழேயுள்ளது. அந்த பெரிய சுழலுதல் நிகழ்ந்து, பூமி நூற்றுக்கணக்கான சதுர மைல்கள் பரப்பு கொண்ட பாகத்தை விழுங்கி அது பூமிக்கடியில் செல்லும்போது, அது அரிசோனாவில் அது பேரலையை (tidal wave) நிச்சயம் தோன்றச் செய்யும்.

ஓ, நாம் முடிவு காலத்தில், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமாக வேண்டிய அந்த மகத்தான நேரத்தில் இருக்கிறோம்.

அவர், “பல இடங்களில் பூமியதிர்ச்சிகள் உண்டாகும், தடுமாற்றமான நேரம், ஜாதிகளினிடையே விரோதம், மனிதரின் இருதயங்கள் பயத்தினால் சோர்ந்து போகும். இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது நீங்கள் நிமிர்ந்து பார்த்து உங்கள் தலைகளை உயர்த்துங்கள். ஏனென்றால் உங்கள் மீட்பு சமீபமாயிருக்கிறது” என்றார். ஓ, என்னே!

**வெட்கப்படுதல், ஜூலை 11, 1965, பத்தி எண் 49–62**

★★★★★

# அந்த சிறிய தாயாரின் இருதயத்தில் பதறல் ஏற்பட்டது. அவள் தன் குழந்தைக்காக கதறினாள்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **பதறல்**
Jeffersonville, Indiana, USA
63-09-01E

95. முடிக்கும் முன்னதாக இதைக் கூற விரும்புகிறேன் அண்மையில் மெக்சிகோவில் பதறலைக் கண்டேன். அந்த பெரிய அரங்கத் தில் நான் மேடையின் மேல் ஏறினேன். அப்பொழுது இரவு சுமார் 10 மணி இருக்கும். ஜனங்கள் காலை 9 மணி முதற் கொண்டே அங்கு கூடத் தொடங்கினார்கள். முப்பது ஆண்டுகளாக குருடாயிருந்த வயோதிபர் ஒருவர் அதற்கு முந்தின இரவு தான் பார்வை யடைந்து, பட்டணம் முழுவதும் சுற்றி நடந்து, சாட்சி பகன்று வந்தார். அங்கு பழைய துணிகளும் கம்பளிகளும் முப்பது நாற்பது கெஜம் உயரத்தில் குவிக்கப்பட்டிருந்தன. அங்கு ஏறக்குறைய நாற்பது அல்லது ஐம்பதாயிரம் பேர் இருந்தனர்; பழைய தொப்பிகளும் கம்பளிகளும் – அது யார் யாருக்குச் சொந்தமோ அவர்களே தீர்மானித்

துக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். அங்கு மழை பயங்கரமாய் பெய்து கொண் டிருந்தது.

96. அவர்கள் கயிற்றின் மூலமாக சுவற் றின் வழியாக என்னை இறக்கினார்கள். நான் மேடையின் மேல் ஏறினேன். ஊழியக்காரன் இங்கு உட்கார்ந்திருப்பவர். அவரும் அவரு டைய மகளும் அதற்கு சில நிமிடங்களுக்கு முன்புதான் அங்கு வந்து சேர்ந்தனர் அவர் சகோதரன் ஆர்மன்ட்-டைக் (Brother Arment) குறித்து பேசினார். அவரை இந்நேரத்தில் நாம் நினைவு கூருகிறோம். இன்றிரவு அவர் மகிமையின் வீதிகளில் இருக்கிறார் சகோதரன் ஆர்மன்ட்டும் அங்கு இருந்தார். அவர் 'மேல் கோட்டை' (Overcoat) கழற்றி விட்டு குளிரில் நடுங்கிக் கொண்டிருந்த சகோதரன் ஜாக் மூரிடம் கொடுத்து போட்டுக் கொள்ளச் சொல்லிவிட்டு, அவர் மழையில் நின்றார், தென் பாகத்தைச் சேர்ந்த அவர், அன்று மெக்சிகோவில் பெய்த மழையின் காரணமாக உறைந்துவிடுவார் போலிருந்தது. அவர் அங்கு நின்று கொண்டிருந்தார்.

என் மகன் பில்லிபால் என்னிடம் வந்து, “அப்பா, நீங்கள் ஒரு உபகாரம் செய்ய வேண்டும். மெக்சிகன் பெண்மணி ஒருத்தி இன்று காலை மரித்துப்போன அவளுடைய குழந்தையின் சடலத்துடன் இங்கு நின்று கொண்டிருக்கிறாள். அவளை வரிசையில் வராமல் தடுக்க போதிய வாயில் காப்போர் (Ushers) இல்லை” என்றான். குருடனான வயோதிபன் ஒருவன் மேல் கையை வைத்தல் அவனுக்குப் பார்வையளிக்குமானால், மரித்துப் போன அவள் குழந்தையின் மேல் கையை வைத்தால், அதற்கு மீண்டும் உயிரையளிக்க வேண்டும் என்னும் விசுவாசம் அவள் கொண்டிருந்தாள். அவள் கத்தோலிக்க மார்க்கத்தைச் சேர்ந்தவள். அவளை யாராலும் பிடித்து நிறுத்த முடியவில்லை. சகோதரன் எஸ்பினோசாவும் மற்றோரும் அவளிடம், “எங்களிடம் ஜெப அட்டைகள் இல்லை. எல்லாம் கொடுத்து தீர்ந்துவிட்டது. நீ இன்னும் ஒரு இரவு காத்திருக்க வேண்டும்” என்று கூறியும் யாதொரு பயனுமில்லை.

97. அவளோ, “என் குழந்தை இன்று காலை இறந்துவிட்டது. நான் அங்கு மேடைக்கு செல்ல வேண்டும்” என்று பதிலளித்தாள். ஜெப அட்டை இருந்தாலும் இல்லாமற் போனாலும், அவள் எப்படியா யினும் அங்கு செல்ல வேண்டுமென்று அடம் பிடித்தாள். அவளைத் தடுத்து நிறுத்த அவர் கள் 300 வாயில் காப்போர்களை வரிசையாக நிறுத்தினர். இருந்தபோதிலும், அவர்கள் கால் கள் வழியாக அவள் கடந்துசென்று, அவர்கள் முதுகுகளின் மேலேறிக் குதித்து, மரித்த குழந்தையின் சடலத்தை கையிலேந்தி ஓடி, அவர்கள் மத்தியில் விழுந்து, மீண்டும் எழுந்து ஓடத் தொடங்கினாள். இவையாவும் அவளில் எவ்வித வித்தியாசத்தையும் உண்டு பண்ண வில்லை. எப்படியாயினும் அவள் அங்கு அடைய முயன்றாள். அவள் பதறல் கொண் டிருந்தாள். பார்வையளித்த தேவன், உயிரை யும் அளிக்க முடியும் என்பதாய் தேவன் அவள் இருதயத்தில் பேசியிருந்தார். ஓ, அவள் பதறல் கொண்டிருந்தாள். அவளுக்குள் ஏதோ ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

98. ஓ, வியாதியஸ்தர்களே, நீங்களும் அதை சில நிமிடங்கள் உங்களுக்குள் எரிய விட்டுகொடுத்து, என்ன நிகழ்கிறதென்று பாருங்கள் – அத்தகைய பதறல்... அன்றிரவு இச்சிறுவனை சுகமாக்கின தேவன், புற்று நோயால் அவதியுறும் இந்த ஸ்திரீயையும், இந்த மனிதனையும், குணமாக்கமுடியும். குமாரி ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல்... ஓ, ஆயிரக்கணக்கானவை... யாரும் தர்க்கிக்கக் கூடாத சாட்சிகள் – மரித்தோரை உயிரோ டெழுப்புதல், வியாதியஸ்தரை சுகப்படுத்துதல், இன்னும் அநேக செயல்கள் நேற்று அவர் தேவனாயிருந்தால், இன்றும் அவர் தேவனா யிருக்கிறார். பதறும் நிலைக்கு வாருங்கள். அப்பொழுது உங்களில் ஏதாகிலும் கிரியை நடக்கும்.

99. அவள் (மெக்சிகன் பெண்) பதறல் கொண்டு என்னை அணுகினாள். நான் சகோ. ஜாக் மூரிடம், "அவளுக்கு என்னைத் தெரி யாது. அவள் என்னை முன்பு கண்டதில்லை. யார் மேடையின் மேல் இருக்கிறார்கள் என்று அவளுக்கு தெரியாது" என்றேன் – அந்த

சிறிய கத்தோலிக்கப் பெண். அவளுக்கு ஆங்கிலம் ஒரு வார்த்தையும் கூட பேசத் தெரியாது. அப்படியிருக்க, யாரென்று அவளுக் குத் தெரியப் போகின்றது. எனவே நான் சகோ. ஜாக் மூரிடம், "நீங்கள் கீழே இறங்கிச் சென்று குழந்தைக்காக ஜெபம் செய்யுங்கள். அவள் திருப்தியடைந்து போய்விடுவாள்" என்றேன். அங்கு சகஜமாக கூச்சல் போட்டு கேட்டுக் கொண்டேயிருந்தது. அவள் குதிப்பாள்; அப்பொழுது எல்லோரும் அவளை அடக்கி சத்தம் போடுவார்கள். அவளோ அவர்கள் தோள்களின் மேல் ஓடி, அவர்கள் மத்தியில் விழுந்துவிடுவாள். இப்படி சில அடி தூரம் முன்னேறுவாள், அவர்கள் அவளைப் பின்னால் தள்ளப் பார்ப்பார்கள். அவளோ குழந்தையைப் பிடித்துக் கொண்டே அவர்கள் கால்களின் வழியாகப் புகுந்து ஓடி வருவாள். வாயில் காப்போரையும் மற்றவர்களையும் அவள் கலங்கச் செய்தாள். அவளுக்கு அது எவ்வித வித்தியாசத்தையும் உண்டு பண்ண வில்லை. எப்படியாயினும் அவள் அவ்விடத்

தையடைய வேண்டும். ஊழியக்காரனை ஜெபிக்கச் செய்ய வேண்டும்.

100. சூனேமியாளைப் போன்ற வெறோரு வரலாறு இது. ஒரே ஒரு வித்தியாசம் என்ன வெனில், அது 3500 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது; இது 3 அல்லது 4 ஆண்டு களுக்கு முன்பு நிகழ்ந்தது. பாருங்கள்? இதே இன்றிரவும் நிகழக்கூடும். அதே பதறல் எழுந் தால், அது அன்பையும் விசுவாசத்தையும் போர்க்களத்திற்கு அனுப்பி, உங்களுக்கு தேவையானதைப் பெற்றுக் கொள்ளச் செய்யும். ஏனெனில் நீங்கள் அதைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது தேவனுடைய வாக்குத் தத்தமாயுள்ளது.

101. நான் அங்கிருந்த ஊழியக்காரனிடம் – சுவிசேஷகனிடம் அந்தப் பெண்ணுக்காக வருத்தப்பட்டேன். ஆனால் எனக்குள் எவ்வித பதறலும் எழவில்லை. நான், “சரி, சகோ. ஜாக் மூர் அவளுக்காக ஜெபிப்பார். அத்துடன் அது முடிவடைந்துவிடும்'' என்று நினைத்தேன். “நான் இப்பொழுது கூறினது போன்று விசுவாசம்...” என்று பேசத் தொடங்கினேன்.

அப்பொழுது நான் பார்த்தபோது, ஒரு தரிசனம் எனக்குண்டானது. அந்த தரிசனத்தில் கறுப்பு நிறமுள்ள மெக்சிகன் குழந்தை ஒன்று அமர்ந்து கொண்டிருந்தது. அது என்னை நோக்கி சிரித்துக் கொண்டேயிருந்தது. நான் உடனே, "சற்று பொறுங்கள், சற்று பொறுங் கள்" என்றேன். அவளுடைய பதறல் பரிசுத்த ஆவியானவரை ஏவி, நான் பேசிக் கொண் டிருக்கும் பொருளையும் என் இருதயத்தையும் அவர் மாற்றி, அவளுடைய குழந்தை அங்கு உட்கார்ந்து கொண்டிருப்பதை தரிசனத்தில் எனக்குக் காண்பித்தார். பரிசுத்த ஆவியானவர் மீண்டும் என்மேல் வரும்படி அது செய்தது. நான் "சற்று பொறுங்கள், சற்று பொறுங்கள். குழந்தையை என்னிடம் கொண்டு வாருங்கள்" என்றேன். இறந்துபோன ஒரு உருவத்தை, நீலமும் வெள்ளையும் கலந்த ஈரக் கம்பளி யில் சுற்றிய வண்ணம் அவள் என்னிடம் சுமந்து கொண்டு வந்தாள். அவள் இயேசு வின் உருவம் கொண்ட சிலுவையையும், (Crucifix) ஜெப மாலையையும் (Rosary) கையில் பிடித்திருந்தாள். அவள் தாழ விழுந்து,

“மரியாளே, வாழ்க!” (Hail Mary!) என்னும் கத்தோலிக்கரின் ஜெபத்தைக் கூற முயன்றாள். நான், “அதை உள்ளே போடு, அது அவசிய மில்லை” என்றேன்.

அவள் என் அருகில் வந்து, “பாதிரியாரே” என்று கூறி அலறினாள்.

நான் அவளிடம், “என்னை அவ்வாறு அழைக்க வேண்டாம். நீ விசுவாசிக்கிறாயா?” என்று கேட்டேன். மொழிபெயர்ப்பாளர் ஸ்பானிய மொழியில் மொழி பெயர்த்துக் கூறினார்.

அவள், “ஆம்” என்றாள். அவள் விசுவா சித்தாள். மொழிபெயர்ப்பாளர் அவளிடம், எப்படி அந்த விசுவாசம் அவளுக்கு வந்தது என்று கேட்க, அவள், “தேவன் பார்வையற்ற ஒருவருக்கு பார்வையளிக்கக் கூடுமானால் இறந்துபோன என் குழந்தையின் உயிரையும் திரும்ப அளிக்க முடியும்” என்று கூறினாள்.

ஆமென்! பதறல் அதற்கு நேராக அவளைத் தள்ளிற்று. என்னால் ஒன்றும் ஆகவில்லை நான் தரிசனத்தை மாத்திரமே

கண்டேன். "கர்த்தராகிய ஆண்டவரே ஒரு சிறு குழந்தையைக் குறித்த தரிசனத்தைக் கண்டேன். ஒருவேளை அது இதுவாக இருக்கலாம்" என்றேன். அந்நேரத்தில் குழந்தை கால்களை உதைத்துக் கொண்டு வா! வா! என்று அழுதது.

அவளோடு மருத்துவரிடம் சென்று, "குழந்தை இறந்து போனது" என்னும் அறிக்கையை வாங்கி வாருங்கள் என்றேன். மருத்துவர் "இக்குழந்தையின் மூச்சு, இருதயம்; நின்று, இரட்டைநிமோனியாவால் (Double pnemonia) என் அலுவலகத்தில் இன்று காலை ஒன்பது மணிக்கு இறந்தது" என்று எழுதிக்கொடுத்தார்.

ஓ, அக்குழந்தை எனக்குத் தெரிந்த வரை இன்றிரவில் மெக்சிக்கோவில் ஜீவித்துக் கொண்டிருக்கிறது. ஏன்? அந்த சிறிய தாயா ரின் இருதயத்தில் பதறல் ஏற்பட்டது. அவள் தன் குழந்தைக்காக கதறினாள். குருடனின் கண்களை அவர் திறக்கக் கூடுமானால், இறந்து போன குழந்தையையும் அவர்

உயிரோடெழுப்ப முடியும் என்று அவள் அறிந்திருந்தாள்.

102. பதறல் நிலை. “உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், நான் உங்களுக்குச் செவி கொடுப்பேன்” பாருங்கள்?

இராஜ்யம்... நியாயப்பிரமாணமும் தீர்க்க தரிசனங்களும் யோவான் வரைக்கும் வழங்கி வந்தது. அது முதல் தேவனுடைய ராஜ்யம் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டு வருகிறது யாவரும் பலவந்தமாய் அதில் பிரவேசிக் கிறார்கள் (லூக். 16:16). நீங்கள் அங்கு சும்மா நின்று கொண்டு “ஆண்டவரே என் கழுத்துப் பட்டையைப் பிடித்து என்னை உள்ளே தள்ளி விடும்” என்று கூறமுடியாது. நீங்கள் பலவந்தமாய் அதற்குள் பிரவேசிக்க வேண்டும் நீங்கள் மரணத்துக்கும் ஜீவனுக்குமிடையே வந்து, பதறல் கொள்ளவேண்டும்.

★★★★★

# காலத் திரைக்கு அப்பால்

நானும் கர்த்தருடைய
வருகைக்காகக் காத்துக்
கொண்டிருக்கும் என்
சகோதரரையும் மற்ற
பரிசுத்தவான்களையும்
காண தேவனாகிய
கர்த்தர் அனுமதித்தார்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# செய்தி: **ஐந்தாம் முத்திரை**, மார்ச் 22, 1963, ஜெபர்ஸன்வில், இந்தியானா, அமெரிக்கா

345. எனக்கு பிரசங்கத்திற்காக கொடுக்கப்பட்ட சமயம் முடிந்துவிட்டது. ஆனால் உங்களால் முடிந்தால், இன்னும் சில காரியங்களைக் கூற விரும்புகிறேன். (சபையார் "தொடர்ந்து பேசுங்கள்" என்கின்றனர் - ஆசி) இங்கு உஷ்ணமாயிருக்கிறதென்று எனக்குத் தெரியும். எனக்கும் வியர்க்கிறது.

346. ஆனால் கவனியுங்கள், சில காரியங்களை உங்களிடம் கூற நான் விரும்புகிறேன். அவை என் இருதயத்தை அனல் மூட்டும் அளவுக்கு நல்லவைகளாய் அமைந்துள்ளது. நீங்கள் அதை மறந்திருக்கமாட்டீர்கள் என்றே நான் நம்புகிறேன், பாருங்கள். இதை நான் தேவனுடைய சமூகத்திற்கு முன்பாக

உங்களிடம் கூறுகிறேன். ஏறக்குறைய ஒரு வருடத்துக்கு முன்பு, என் ஊழியத்தில் இரட்சிக்கப்பட்ட என் ஜனங்கள் வெள்ளை யங்கிகள் தரித்திருப்பதை நான் காண அவர் கிருபையாய் அனுமதித்தார். உங்களுக்கு ஞாபகம் உள்ளதா? (சபையார் "ஆமென்" - ஆசி) நினைவிருக்கின்றதா? புறஜாதி மணவாட்டியை நான் கண்டதை உங்களிடம் கூறினது நினைவிருக்கிறதா? (ஆமென்) இப் பொழுது அவர்கள் அங்கிருக்கின்றனர். நான் அவர்களைக் கண்டபோது அவர் களெல்லாரும் வெள்ளையங்கிகளை அணிந்திருந்தனர்.

347. நான் படுக்கையை விட்டு விழித்திருந்தேன். நான் ஒரு கூட்டத்தை நடத்தி முடித்திருந்தேன். ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்னால் இருக்கும். நான் ஒரு நாள் படுக்கையை விட்டு எழுந்தேன். என் மனைவியைப் பார்த்து, "அன்பே" என்று கூப்பிட்டேன். அவள் அசையவேயில்லை. பிள்ளைகள்... நான் எழுந்திருந்து, பழைய இடத்திலுள்ள பள்ளிக்கு பிள்ளைகளைக்

கொண்டு செல்ல வேண்டியிருந்தது. நல்லது, நான் படுக்கையை விட்டு எழுந்து, சாய்ந்து உட்கார்ந்தேன். எங்களிடத்தில் பழங்கால கட்டில் ஒன்று உண்டு. நான் அவ்விதமாக சாய்ந்து உட்கார்ந்தேன்.

348. “எனக்கு ஐம்பத்து மூன்று வயதாகிவிட்டது. தேவனுக்கென்று ஏதாவது செய்யவேண்டுமென்றால் உடனடியாக நான் செய்ய வேண்டும். இல்லையேல் சற்று கழிந்தால் ஒன்றும் செய்ய முடியாதபடிக்கு வய தாகிவிட்டிருக்கும்” என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

349. ஆகவே நான் அது உண்மை என்று நினைத்தேன். இன்னும் எனக்கு அதிக நாட்களில்லை என்றும், நான் சீக்கிரமாக கடந்து செல்ல வேண்டியவனாயிருக்கிறேன் என்றும் எண்ணினேன். நான் என் தந்தை வாழ்ந்ததைவிட இப்பொழுது ஒரு வயது கூடுதலாகவே வாழ்ந்திருக்கிறேன். பாருங்கள்? “நான் அதிசீக்கிரத்தில் கடந்து செல்ல வேண்டியவனாய் இருக்கிறேன். நான் அதைக் காண்கிறேன். ஆனால் தேவனுக்கென்று

இன்னும் ஒன்றும் செய்யவில்லை'' என்றே எண்ணினேன். 'நான் தேவனுக்காக ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டும் என்று எப்பொழு துமே விரும்பியுள்ளேன். நான் அவ்விதமாகச் செய்ய வேண்டுமெனில், அதைத் துரிதமாகச் செய்ய வேண்டும். நான் அதை எப்படிச் செய்யப் போகிறேன் என்று அறியாதவனாய் இருக்கிறேன், அவ்வளவுதான், என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

350. அவரது வருகையின்போது நான் உயிர்வாழ்ந்து கொண்டிருக்க வேண்டுமென்னும் விருப்பம் எனக்கு எப்பொழுதும் இருந்து வந்தது. ஏனெனில் நான் ஒரு ஆவியாயிருக்க, ஒரு ஆவியின் உருவம் (spook) கொண்டவனாயிருக்க விரும்பவில்லை.

351. பாருங்கள், நான் அந்த ஆவி உருவத்திலிருக்க பயந்தேன். நீங்கள் அறிவீர்கள், அவ்விதமாக நான் சகோதரன் நெவிலை சந்திப்பேனானால் அவர் ஒரு வெண்மேகமாகவே சுற்றி அசைந்து கொண்டிருப்பார் என்றே நான் எப்பொழுதும்

எண்ணினேன். நான் வேறொரு உணர்வினால் அவரைப் பார்த்து, "ஹலோ, சகோதரன் நெவில்" என்பேன். அவரும் "ஹலோ சகோதரன் பிரான்ஹாமே" என்பார்; ஏனெனில் அவரால் அசைய முடியாதே என்றே எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அது சகோதரன் நெவில் என்பதை மாத்திரமே அறிந்திருப்பேன் என்று நினைத்தேன். ஆம், நான் எப்பொழுதும் செய்வதுபோல் சகோதரன் நெவிலுடைய கரங்களை குலுக்குவேன். மனிதனான நான், அதை மட்டுமே செய்ய அறிந்துள்ளேன். பாருங்கள், அவருடைய கரத்தை குலுக்குவேன்; ஆனால் அவருக்கு கைகள் இராதே. ஏனெனில் அவைகள் மரணக்குழியில் அழுகிப் போனதே என்று நினைத்தேன். பாருங்கள்?

352. "என்னே, நான் இவ்விதமாகக் கடந்து செல்ல வேண்டியதில்லை என்றே நம்புகிறேன்" என்று எண்ணினேன். இப்பொழுது... நான் உங்களுக்கு உண்மையைக் கூறிடவே விரும்புகிறேன். நான் மரிப்பதற்கு பயந்தேன். ஆனால் நான்

கைவிடப்படுவேன் என்ற பயம் எனக்கில்லை. ஆனால் என்னமோ ஒரு ஆவியாக இருக்க நான் விரும்பினதில்லை. உடலைக்கொண்ட ஒரு மனிதனாகவே இருக்க நான் விரும்பினேன். நான் எடுக்கப்படுதலுக்காக காத்திருக்கவே விரும்பினேன். பாருங்கள். ஒரு ஆவியாக சுற்றிக் கொண்டிருக்க எனக்கு விருப்பமில்லை. இங்ஙனம் எண்ணியவாறே நான் படுத்துக்கொண்டிருந்தேன்.

353. திடீரென்று அதிசயமான ஒன்று சம்பவித்தது. (சகோதரன் பிரான்ஹாம் தன் விரல்களை ஒருமுறை சொடுக்கினார் - ஆசி).

354. இப்பொழுது, அந்த தரிசனங்களைக் குறித்து நீங்கள் அறிவீர்கள். அவைகள் உங்களுக்குப் பழக்கமானதே. இதை நான் தரிசனமென்று கூறத் தலைப்பட்டால், இத்தகைய ஒரு தரிசனத்தை நான் என் சிறுவயது முதல் கண்டதேயில்லை. பாருங்கள்?

355. சடுதியாக இச்சரீரத்தை விட்டுப்போகும் உணர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

'ஊம்-ஓ' என்று நான் நினைத்தேன். "நான் ஏற்கனவே மரித்து விட்டேன், பாருங்கள்," என்றே எண்ணினேன். பாருங்கள்? என் ஆவி என் சரீரத்தை விட்டுப் பிரிந்தது.

356. நான் ஒரு ஸ்தலத்திற்கு வந்தேன். அப்பொழுது, "நான் திரும்பி பார்க்க விரும்புகிறேன்" என்று எண்ணினேன். நண்பர்களே, நான் உங்களுக்கு முன்பு நிற்பது போலவே, அது மிக உண்மையாகவே இருந்தது. பாருங்கள்? நான் திரும்பிப் பார்த்தபோது, என் சரீரம் மாத்திரம் என் மனைவியின் பக்கத்தில் படுத்திருப்பதைக் கண்டேன்.

357. இருதய அதிர்ச்சியின் காரணமாக நான் சடுதியாக இறந்து விட்டதாக எண்ணிக்கொண்டேன். பாருங்கள்? இவ்விதமாக சடுதியாய் மரிப்பதுதான் அருமையானது என்று எண்ணினேன். "இருதய அதிர்ச்சியினால் மரித்துவிட்டேன். நான் துன்பப்படவில்லை" என்று நினைத்தேன். நான் நோக்கிப் பார்த்து, "நல்லது, இப்பொழுது இது விநோதமாயுள்ளதே. அங்கே நான்

படுக்கையில் படுத்திருக்கிறேன்; இங்கே நிற்கிறேன்" என்று எண்ணினேன்.

358. ஆகவே, நான் திரும்பினேன். என் ஆவி சென்ற ஸ்தலத்தில் ஒரு மகத்தான, பெரிய வயல் வெளியைக் கண்டேன். அங்கே ஊதா நிறப் புற்கள் பரவியிருந்தன. இது என்னவென்று நான் அதிசயப்பட்டேன்.

359. நான் பார்க்கையில், சடுதியாக, லட்சக்கணக்கான வாலிபப் பெண்கள் வெள்ளையங்கி தரித்தவர்களாய், தலைமுடி இடுப்பு வரைக்கும் வளர்ந்து, காலில் ஒன்றும் அணியாமல் என்னை நோக்கி ஓடிவருவதைக் கண்டேன். நான் "இது என்ன" என்று நினைத்தேன். அவர்கள் மிகவும் அழகாயிருந்தனர்.

360. நான் திரும்பி அங்கே நோக்கினேன். நான் அங்குதான் (படுக்கையில் – தமிழாக்கியோன்) இருந்தேன். நான் இந்த வழியாய் மேலே நோக்கிப் பார்த்தேன். அதோ அவர்கள் வந்தார்கள். நான் என் நகத்தைக் கடித்துக் கொண்டேன். நான்

நித்திரையில் இல்லையே, அது சரி" ஆனால் என்னால் உணர முடிந்தது. ஆகவே, "நல்லது, ஏதோவொன்று, புதிராய் இருக்கின்றது" என்று எண்ணினேன்.

361. அந்த வாலிபப் பெண்கள் என்னை நோக்கி ஓடிவந்தனர். இவ்வித அழகான பெண்களை நான் ஒருபோதும் கண்டதேயில்லை. அவர்கள் என்னை நோக்கி ஓடி வந்தனர். அவர்கள் என்னிடம் ஓடி வந்தபோது...

362. நான் எவ்விதமானவன் என்று நீங்கள் அறிவீர்கள். நான் ஸ்திரீகளை வெறுப்பவன் என்று எல்லோரும் கூறுவது வழக்கம். ஆனால் அது உண்மையல்ல. பாருங்கள். ஒரு நல்ல ஸ்திரீ விலையேறப் பெற்ற ஆபரணமாயிருக்கிறாள். சாலமோன் கூறுவதைப்போல, இரத்தத்தில் தண்ணீர் கலந்த தண்ணீரைப்போல... நன்னடத்தை கெட்ட ஸ்திரீகளையே நான் வெறுக்கிறேன்.

363. இந்தப் பெண்கள் என்னருகில் வந்து, தங்கள் கரங்களினால் என்னைச் சுற்ற

ஆரம்பித்தனர். இப்பொழுது, இது அசாதாரண ஒன்றாகும். நான் அதற்கு ஒப்புதல் அளிப்பவன் அல்ல என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகவே, அவர்கள். இது ஆண்களும் பெண்களுமாக ஒன்றாய் அமர்ந்துள்ள ஒரு கூட்டம். ஆகவே நான் இதை இவ்வழியில் கூற வேண்டியவனாய் இருக்கிறேன். அவர்கள் பெண்கள். அவர்கள் பெண்கள், அவர்கள் என்னை ஒவ்வொருவராகக் கட்டித் தழுவி, "எங்கள் அருமை சகோதரனே" என்றனர். என்னை ஒரு பெண் கட்டித்தழுவின பின்பு, வேறொரு பெண் என்னைக் கட்டித் தழுவினாள்.

364. நான் அங்கே நின்று, பார்த்துக் கொண்டிருந்தேன். "நல்லது, இப்பொழுது, இது என்ன?" என்று நினைத்தேன். அவர்கள் அங்கே நின்றிருந்தனர். "என்ன சம்பவித்தது" என்று எண்ணினேன். நான் திரும்பி கீழே பார்த்தேன். அங்கே நான் கட்டிலில் படுத்திருந்தேன். ஆனால் இங்கே நான் நின்றிருந்தேன். இந்த விசித்திரமான காட்சியை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

365. அந்தப் பெண்கள், "எங்கள் அருமை சகோதரனே," என்று சத்தமிட்டுக் கொண்டிருந்தனர்.

366. சகோதரிகளே, நான் இப்பொழுது கூறப்போவதை நீங்கள் மன்னிக்க வேண்டும். நான் சொல்லுவதின் காரணம் என்னவெனில்... நீங்கள் உங்கள் வைத்தியரைக் கேட்டுப் பாருங்கள். **நமக்கு மாசற்ற சிந்தை இல்லாவிழல் நாம் கிறிஸ்தவர்களல்ல.** எனக்குக் கவலையில்லை...

367. நான் அவ்வாறு என் சிறு வயது முதல் வாழ்ந்து வந்திருக்கிறேன் என்பதை தேவனறிவார். நான் சிறுவனாயிருந்தபோது கர்த்தருடைய தூதன் என்னிடம், நான் புகைபிடித்தல், மது அருந்துதல், அல்லது சரீரத்தை அசுசிப்படுத்தும் எந்த செயல்களிலும் ஈடுபடக்கூடாது என்று கூறியிருந்தார். அது உண்மையாகவே இருந்து வந்திருக்கிறது. தேவ கிருபையினால் நான் அதை அனுசரித்து வந்திருக்கிறேன். இரட்சிக்கப்படுவதற்கு முன்பும்

கூட நான் எந்தப் பெண்ணுடனும் சுற்றித் திரிந்ததில்லை. ஆகவே ...

368. ஆனால் ஒரு மனிதன் ஒரு பெண்ணை கட்டித் தழுவும்போது, அவர்கள் ஆரோக்கியமுள்ளவர்களாயிருந்தால், அவர்களிருவருக்கும் ஓர் உணர்ச்சி ஏற்படுகிறது. ஏனெனில் அவர்கள் அணுக்களைக் (Cells) கொண்டவராயிருக்கின்றனர். நீ யாராய் இருந்தாலும் எனக்குக் கவலையில்லை. இப்பொழுது, உனக்கு அவ்வித உணர்வு இல்லை என்று நீ என்னிடம் கூற வேண்டாம்.

369. ஆனால் நான் ஆவியில் சென்றவிடத்தில் அங்குள்ளவர்களுக்கு அணுக்கள் இல்லாததால் அவர்கள் கட்டித் தழுவினாலும் பாவம் செய்வதில்லை. அங்கே ஒரு வித்தியாசம் இருந்தது. அந்தப் பெண்களிடம் சகோதர அன்பு காணப்பட்டதேயன்றி வேறல்ல.

370. ஒரு ஸ்திரீ தனக்களிக்கப்பட்ட ஸ்தானத்தில் நிலை நின்றால், அவள் பூமியில்

ஒரு விலையேறப்பெற்ற ஆபரணமாயிருக்கிறாள். இயல் நயமுடைய நேர்த்தியான ஒவ்வொன்றையும் நான் விரும்புகின்றேன். அவள் அப்பொழுது கௌரவிக்கப்படும் ஒரு சிலையைப் போன்றிருக்கிறாள். நானும் அதை நம்புகிறேன். ஆனால் அவள் நிலை மாறும்போது, கிறிஸ்துவுக்கும் அந்திக்கிறிஸ்துவுக்கும் என்ன வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசம் அவர்களிருவருக்கும் உண்டு.

371. இயற்கையான ஒவ்வொன்றையும் நான் விரும்புகிறேன். ஒரு அசலான, அழகான குதிரை தன் ரூபத்தில் நிற்பதால் நான் அழகான குதிரையை விரும்புகிறேன். அதைப் போலவே ஒவ்வொன்றையும் விரும்புகிறேன். தேவனுடைய அமைப்பில் நிற்கிற ஒரு அழகான மலை, ஸ்திரீகள், அழகான புருஷர்கள் மற்றவை எல்லாவற்றையும் நான் வியந்து பாராட்டுகிறேன்.

372. ஆகவே, அவர்கள் குறைபாடற்றவராய் இருந்தனர். அவர்கள் ஸ்திரீகள் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள். அவர்கள் தங்கள் கரங்களில் எவ்வளவாய்க் கட்டித் தழுவினாலும், பாவம் என்பதே அங்கே ஒருபோதும் இல்லை. ஏனெனில் ஆண் பெண் இருவரின் சுரப்பிகளும் (பாலினச் சுரப்பிகளும்) நீக்கப்பட்டிருந்தன. (சகோதரன் பிரான்ஹாம் தன்னுடைய கரங்களை ஒன்று சேர்த்து ஒரு முறை கொட்டுகிறார் – ஆசி) கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர்கள் குறைபாடற்ற என் சகோதரிகளாக இருந்தனர்.

373. நான் நோக்கிப் பார்த்தேன். ஆகவே, நான் துவங்கி... நான் என் கைகளைப் பார்த்தேன். அந்தப் பெண்கள் காண்பதற்கு மிகவும் வாலிபமாயிருந்தனர். நானும் வாலிபனைப் போலிருந்தேன். நான்...

374. நான் இளைஞனாக இருந்தபோதே என் தலைமயிரை இழந்திருந்தேன். நான் சிறியவனாக இருந்தபோது, ஒரு சவரத் தொழிலாளி என் தலைமயிரில் கார்பாலிக்

அமிலத்தை (carbolic acid) கொட்டி விட்டதால் எனக்கு அவ்விதமாயிற்று. அப்பொழுது முதல் அது அவ்விதமாகவே இருந்து வருகின்றது. என் தலையுச்சி வட்டம் (scalp) மிருதுவாக இருப்பதால், நான் மிக விரைவில் தடுமல் கொள்கிறேன் (get cold). என் தலையில் மயிர்க்கால்கள் இருந்த போதிலும், அது கார்பாலிக் அமிலத்தால் சுடப்பட்டதால், இனிமேல் ஒருபோதும் தலைமயிர் முளைக்காது. பாருங்கள்?

375. பல வருடங்களுக்கு முன்பாக நானும் என் மனைவியும்.... என் தலையை மூடுவதற்கென்று ஒரு சிறிய பொய்மயிர்த்தோகையை (hair piece - wig) வாங்கினோம். அது பொய்யான ஒன்றாய் எனக்குத் தோன்றினதால், நான் அதை அணிவதற்கு எப்பொழுதும் வெட்கப்பட்டேன். நான் பொய்யான ஒன்றையும் விரும்பமாட்டேன்.

376. ஆகவே நான் இவ்விதமான ஒரு தொப்பியை அணிந்து கொள்வேன் என்று நினைத்து சிறிது காலம் அவ்விதமாக

அணிந்திருந்தேன். அவர்கள் என்ன செய்தனர் என்று நீங்கள் அறிவீர்களா? அவர்கள் என்னை பேராயர் (Bishop) என்று அழைக்க விரும்பினர். நான் இவ்விதமாக முயல்கிறேன் என்று... பாருங்கள்? ஆகவே நான் "இது வேண்டாம்" என்று கூறிவிட்டேன்.

377. ஆனால், இப்பொழுது ஜன்னல்கள் அல்லது மற்றொன்றை உயர்த்துவதால் சிறிது குளிர்ந்த காற்று என்னைத் தாக்கும்போது, நான் ஜலதோஷத்தினால் அவதியுறுகிறேன்.

378. இதைக் குறித்து அவருடைய கருத்து என்ன என்று கேட்பதற்காக நான் ஒரு மருத்துவரிடம் சென்றேன். அதற்கு அவர், "நல்லது பாருங்கள், உங்களுடைய மயிர்க்கண்கள் (pores) திறந்துள்ளன. நீங் கள் பிரசங்கிப்பதால் வியர்வை உண்டாகிறது. குளிர்ந்த காற்று வீசுவதால், ஜலதோஷக் கிருமிகளால் சளிபிடித்து, அது உமது தொண்டையில் இறங்குவதால் அடுத்த நாள் காலையில் உம்முடைய தொண்டை கரகரப்பாகிவிடுகின்றது. அவ்வளவுதான்" என்றார்.

379. ஆகவே – ஆகவே, ஓ, என்னே, தலைமயிர் உடையவர்களே, நீங்கள் அதற்காக எவ்வளவு நன்றியுடைவர்களாய் இருக்க வேண்டும். அது சரி. பாருங்கள்?

380. நல்லது, இப்பொழுது, நான் கண்டுபிடித்தது, நான்... எனக்கு பல் இல்லாமல் போனாலும், நான் ஒரு நாள் அவைகளைப் பெற்றுக் கொள்வேன்.

381. ஆகவே ஒரு மனிதனோ ஸ்திரீயோ தான் விரும்பினால் தன் தலை மயிரின் இழப்பை ஈடு செய்ய பொய் மயிர்த்தோகை இனிமேல் அணிந்து கொள்ள வேண்டியதில்லை என்றும், ஒரு ஸ்திரீ தன் தலையில் எலிகள் அல்லது ஐந்து சுண்டெலியைப் போன்று வைத்துக் கொள்ளக் கூடாது என்று நான் நினைக்கமாட்டேன். பாருங்கள். ஆனால் நீங்கள் அதைச் செய்வீர்களானால், நீங்கள் அதை எதற்காக செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. பாருங்கள்? நீங்கள் எதற்காக அதைச் செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்ததாகும். ஆகவே...

382. நான் அவ்விதமாக அங்கே நின்று கொண்டிருந்தேன். நான் இழந்து போயிருந்த தலைமயிரும் மறுபடியும் அடர்த்தியாக முளைத்து விட்டது போன்று தோன்றியது. என்னே! நான் ஒரு வாலிபனைப் போலிருந்தேன். அந்தப் பெண்களும் அனைவரும் வாலிபமாயிருந்தனர். இது என்ன விசித்திரமாயிருக்கிறதே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். அவர்கள் என்னை நோக்கி ஓடி...

383. அவர்கள் ஓடி வருவதைக் காண்கையில், என் மனைவி ஹோப் (Hope) வருவதைக் கண்டேன். அவள் பார்த்தாள்... அவள் இருபத்திரெண்டு வயதில் மரணமடைந்தாள் என்பது உங்களுக்குத் தெரியும். அவள் முன்பிருந்தது போல அழகாகக் காணப்பட்டாள். அவளுக்குக் கறுத்த பெரிய கண்களும் நீண்ட கருமையான தலைமயிரும் இருந்ததென்று அநேகர் அறிவீர்கள். அவள் ஜெர்மனி நாட்டவள். அவளுடைய கறுத்த கூந்தல் பின்புறமாக கீழே தொங்கிக் கொண்டிருந்தது. “இப்பொழுது,

அவள் இங்கே வந்து, அவள் என்னை, பில்லி” என்று கூப்பிடுவாள் என்று நினைத்தேன். அவள் அவ்விதம் அழைப்பாள் என்று அறிவேன். அவள் இங்கே வந்து 'பில்லி' என்று கூப்பிடுவாள் என்று நான் அறிவேன்.”

384. நான் கவனித்துக்கொண்டேயிருந்தேன். அங்குள்ள ஒவ்வொரு பெண்ணும் என்னிடம் வந்து, என்னைக் கட்டித் தழுவி, “ஓ, அருமையான சகோதரனே, நாங்கள் உம்மைக் காண்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்” என்று கூறினர். நான் நினைத்தேன்... அனைவரும் ஒரே விதத்தில் உடை அணிந்துள்ளனர். ஆனால் அவர்கள் தலைமயிர், கறுப்பு, சிகப்பு, வெண்பொன்னிறம் என்று வெவ்வேறு வித்தியாசமான நிறத்தில் இருந்தது. அவர்கள் என்னை நோக்கி வந்தார்கள்; ஆனால் அவர்கள் அனைவரும் வாலிபமாயிருந்தனர்.

385. அவள் என்னிடத்தில் வரும்போது, “அவள் என்ன சொல்லப் போகிறாள் என்று

மாத்திரம் நான் பார்க்கப்போகிறேன்" என்று நான் நினைத்தேன்.

386. அவள் என்னை நோக்கிப் பார்த்து, 'எங்கள் அருமை சகோதரனே' என்றழைத்தாள். அவள் என்னைக் கட்டி தழுவிவிட்டு, பேசாமல் சென்றாள். மற்ற பெண்களும் என்னிடம் வந்து, என்னைக் கட்டித் தழுவி சென்று விட்டனர்.

387. ஒரு சத்தம் கேட்டது. நான் இவ்விதம் பார்த்தபோது, வாலிபர்கள் என்னை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்கள் ஏறக்குறைய இருபது வயது நிரம்பியதுபோல் காணப்பட்டனர். அவர்களும் கறுப்பு, பொன்நிறம் என்று வித்தியாசமான தலைமயிர் உடையவராய் இருந்தனர். அவர்களும் வெள்ளையங்கி தரித்து, காலணிகளின்றி என்னை அணுகி, கட்டித் தழுவி, "எங்கள் அருமை சகோதரனே" என்றனர்.

388. நான் கீழே நோக்கியபோது, என் உடல் அங்கு இருப்பதைக் கண்டேன். என்ன அதிசயம்" என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

389. ஆகவே, அப்பொழுது ஒரு சத்தம் என்னிடம் பேச ஆரம்பித்தது. 'உன் ஜனங்களிடம் நீ சேர்க்கப்பட்டிருக்கிறாய்' என்று சொன்னது. அந்த சத்தத்தை நான் காணமுடியவில்லை. அப்பொழுது ஒருவர் என்னை இதைப் போன்ற ஒரு உயர்ந்த பீடத்தின்மேல் நிறுத்தினார். "ஏன் அவ்வாறு செய்கின்றீர்?" என்று நான் கேட்டேன்.

அவர், "பூமியில் எங்களுக்கு வழிகாட்டியாய் இருந்தீர்" (Leader) என்றார். ஆகவே நான், "நல்லது என்னால் – என்னால் இதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே" என்றேன்.

390. அந்த சத்தம் என்னிடம் பேசிக் கொண்டிருந்தது. ஆனால் நான் அந்த சத்தத்தைக் காண முடியவில்லை. இப்பொழுது அது எனக்கு மேலாக இருந்தது, என்னுடன் பேசிக்கொண்டிருந்தது.

391. "நல்லது, நான் கடந்து வந்திருப்பேனாகில், நான் இயேசுவைக் காண விரும்புகிறேன். அவரே என் ஜீவன், நான்

அவரைக் காண விரும்புகிறேன்” என்று கூறினேன்.

அதற்கு அவர், “அவரை நீ இப்பொழுது காண முடியாது. அவர் இன்னும் உயர்ந்த ஸ்தலத்தில் இருக்கிறார்” என்றார்.

392. பாருங்கள்? மனிதன் மரித்த பின்பு ஆறாம் ஸ்தலத்துக்குப் போகிறான். அது பலிபீடத்தின் கீழிருக்கும். ஆனால் தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார். இது ஆறாவதாகும்.

393. ஆகவே அவர்கள் அங்கே இருந்தனர். ஒவ்வொருவரும் கடந்து சென்றுக் கொண்டிருந்தனர். நான் கூறினேன். அங்கே உண்மையாகவே அவர்கள் அங்கே லட்சக்கணக்கில் இருந்தனர். நான் அவர்களை ஒருபோதும் காணவில்லை... நான் அங்கே உட்கார்ந்திருந்தபொழுது, இந்தப் பெண்களும், ஆண்களும் என்னிடம் ஓடிவந்து, இன்னும் என்னைக் கட்டித் தழுவிக்கொண்டு, “சகோதரனே” என்று அழைத்துக் கொண்டிருந்தனர். நான் அங்கே உட்கார்ந்திருந்தேன்.

394. அப்பொழுது அந்தச் சத்தம், "யாக்கோபு தன் ஜனங்களோடு சேர்க்கப்பட்டதுபோல, நீயும் உன் ஜனங்களுடன் சேர்க்கப்பட்டிருக்கிறாய்" என்று கூறிற்று.

"இவர்களெல்லாம் என் ஜனங்களா? இவர்கள் பிரான்ஹாம் குடும்பத்தைச் சார்ந்தவர்களா?" என்று நான் கேட்டேன்.

அவர் "இல்லை, அவர்களெல்லாம் உன் மூலமாக கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள்" என்று பதில் கூறினார்.

395. நான் சுற்றிலும் நோக்கினேன். அப்பொழுது மிக அழகிய ஒரு ஸ்திரீ என்னிடத்தில் ஓடி வந்தாள். அவளும் மற்ற பெண்களைப் போலவே இருந்தாள். அவள் தன் கரங்களால் என்னைச் சுற்றி, என்னைத் தழுவி, "என் அருமை சகோதரனே" என்று கூறி, என்னை நோக்கிப் பார்த்தாள்.

396. "என்னே! அவள் ஒரு தூதனைப்போன்று காணப்பட்டாள்" என்று நான் எண்ணினேன்.

அவள் கடந்து சென்றாள். அந்த சத்தம் என்னிடம், 'அவள் யாரென்று தெரிகிறதா?' என்று கேட்டது.

"இல்லை, என்னால் அவளை அடையாளங் கண்டுகொள்ள இயலவில்லை" என்றேன்.

397. அதற்கு அது, "அவள் தொண்ணூறு வயது கடந்த பிறகு அவளை நீ கிறிஸ்துவினிடம் வழி நடத்தினாய். ஆகவே அவள் உன்னை அதிகம் மதிக்கிறாள்" என்றது.

"அந்த அழகிய பெண் தொண்ணூறு வயது கடந்தவளா?" என்றேன்.

398. "ஆம், அவள் இனி ஒருபோதும் வயது சென்றவளாக மாறுவதில்லை. ஆகவேதான் அவள், 'அருமையான சகோதரனே' என்று அழைக்கிறாள்" என்று அது கூறினது.

399. "ஓ, என்னே! நான் இதைக் குறித்தா பயந்தேன். இவர்கள் தத்ரூபமாக இருக்கிறார்களே! இவர்கள் வேறெங்கும் செல்வதில்லை. அவர்கள் அங்கு சதாகாலமும்

இருப்பதால் சலிப்பு கொள்வதில்லை" என்று நினைத்துக்கொண்டேன்.

"நான் ஏன் இயேசுவைக் காணமுடியாது?" என்று கேட்டேன்.

400. அப்பொழுது அந்த சத்தம் என்னிடம், "அவர் ஒரு நாள் வருவார். அவர் முதலில் உன்னிடம் வந்து உனக்குத் தீர்ப்பளிப்பார்' என்றது. அது, "இவர்கள் நீ வழிநடத்தின உன்னுடைய ஜனங்கள் உன்னால் மாறுதல் அடைந்தவர்கள் (Converts)," என்று கூறினது.

401. அதற்கு நான், "இவர்களுக்கு வழிகாட்டினதினாலே அதை அனுசரித்து எனக்குத் தீர்ப்பளிக்க வேண்டுமா?" என்று கேட்டேன்.

'ஆம்' என்று பதில் வந்தது.

402. "ஒவ்வொரு வழிகாட்டிக்கும் இவ்வாறே தீர்ப்பளிக்கப்பட வேண்டுமா" என்றேன்.

அது 'ஆம்" என்றது. நான் "பவுலைக் குறித்து என்ன?" என்றேன்.

அவர், "அவனும் அவனுடைய கூட்டத்துடன் நியாயந்தீர்க்கப்படுவான்" என்றார்.

403. "**பவுலின் கூட்டம் பிரவேசிக்குமானால் என் கூட்டமும் பிரவேசிக்க வேண்டும், ஏனெனில் அவன் பிரசங்கித்த அதே வார்த்தையையே நானும் பிரசங்கித்தேன்.**" அதுதான். **அவன் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தான்; நானும் அவ்வாறே ஞானஸ்நானம் கொடுத்தேன்; நான் பிரசங்கித்தேன்..** என்றேன்.

404. அதற்கு லட்சக்கணக்கான அவர்கள் எல்லாரும் ஒன்றாக, "அதன் பேரில்தான் நாங்கள் இளைப்பாறிக்கொண்டிருக்கிறோம்" என்றனர்.

405. என்னே, "இதை மாத்திரம் நான் முன்னமே அறிந்திருந்தால், எல்லோரையும் இங்கு வரவழைத்திருப்பேன். அவர்கள்

ஒருக்காலும் இதைக் காணத் தவறக்கூடாது" என்று நான் நினைத்தேன்.

406. அவர், "இப்பொழுது, ஒரு நாள் அவர் வருவார்; அதன்பின்... நாங்கள் இங்கே புசிப்பதும், குடிப்பதும், நித்திரை செய்வதும் இல்லை. நாங்கள் அனைவரும் ஒன்றாக மாத்திரம் இருக்கிறோம்," என்றார்.

407. அது பரிபூரணமல்ல; அதற்கும் மேம்பட்ட காட்சியாயிருந்தது. பயபக்தியூட்டும் ஒன்றுக்கும் மேம்பட்டதாயிருந்தது. அதற்கு எந்தப் பெயரும்... உன்னால் நினைக்கவும் முடியாத... அதை விவரிப்பதற்கு அகராதியில் எந்த வார்த்தையும் கிடையாது. நீங்கள் இந்த க்ஷணத்தில் வந்துவிட்டீர்கள், அவ்வளவே.

408. "நல்லது, இது பரிபூரணமாக இருக்கும். ஆகவே பிறகு அடுத்ததாக நாம் என்ன செய்யப் போகிறோம்" என்று நான் கேட்டேன்.

409. அவர்கள், "இயேசு வந்து உம்முடைய ஊழியத்தை தீர்ப்பளித்த பிறகு, நாங்கள் பூமிக்கு சென்று சரீரங்களை

பெற்றுக் கொள்வோம்” என்றனர். நல்லது, அதைப்பற்றி நான் யோசிக்கவேயில்லை. அது வேத வாக்கியத்துடன் ஒத்திருக்கிறது. “நாங்கள் பூமிக்குச் சென்று, சரீரங்களைப் பெற்றுக் கொள்வோம். அங்கு நாங்கள் புசிப்போம். இங்கு நாங்கள் புசிப்பதுமில்லை, குடிப்பதுமில்லை, நித்திரை செய்வதுமில்லை, நாங்கள் பூமிக்குச் சென்று அங்கு புசிப்போம்” என்றனர்.

410. இது மிகவும் அற்புதமாயிருக்கிறதல்லவா? ஓ, என்னே! நான் ஏன் மரணத்திற்குப் பயந்திருந்தேன்? நான் இங்கு வருவதற்கு, நான் ஏன் மரணத்தைக் குறித்து பயந்தேன்? நல்லது. இது பரிபூரணமான, இன்னும் மிகுதிப்படியான பரிபூரணம், இன்னும் மிகுதிப்படியான பரிபூரணமாயிருக்கிறது. ஓ, இது அற்புதமானதாகும்.

411. பாருங்கள். நாங்கள் அனைவரும் அங்கு பீடத்தின் (altar) கீழ் தான் இருந்தோம். பாருங்கள்? அவர்கள் அங்கு இருந்து கொண்டு கர்த்தருடைய வருகையை

எதிர்நோக்கியிருக்கின்றனர். அவர் நித்திரை யடைந்தவர்களின் சரீரங்களைப் பூமியின் தூளினின்று எழுப்புவார். அவர் வருகையில் நம்மை எழுப்புவார். அவர் வருகையில் நம்மை எழுப்புவார்.

412. அப்பொழுது பரதீசியில் காத்திருக்கும் இவ்வாத்துமாக்கள் அவர் களுடைய சரீரங்களைப் பெற்றுக் கொள்வார்கள். இயேசு பரதீசுக்குச் சென்று ஆபிரகாம், ஈசாக்கு இன்னும் பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களை உயிரோடெழச் செய்தார். அவர்களும் பரிசுத்த நகரத்தில் பிர வேசித்து அநேகருக்குக் காணப்பட்டனர்.

413. இது பூரணமாக வேதப்பூர்வமாய் அமைந்துள்ளது. நான் கண்டது தரிசனமோ அது வேறொன்றே, அது பூரணமாய் வேதப்பூர்வமாயிருக்கிறது.

414. 'இது மிகவும் அதிசயம்' என்று எண்ணியிருக்கும்போது,

415. ஏதோ ஒன்று சத்தமிடுவதைக் கண்டேன். நான் திரும்பிப் பார்த்த போது,

நான் சவாரி செய்த 'பிரின்ஸ்' என்னும் குதிரை என்னருகில் நின்று அதன் தலையை என் தோளின்மேல் போட்டு என்னைத் தழுவ வந்தது. நான் அதற்கு சர்க்கரை கொடுக்கும்போது இருப்பதுபோன்று, உங்களுக்குத் தெரியும், அது தன்னுடைய... நானும் என் கையை அதன் மேலிட்டு, "பிரின்ஸ், நீ இங்கு இருப்பாய் என்று எனக்குத் தெரியும்" என்றேன்.

பிறகு ஏதோ ஒன்று என் கையை நக்கியது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. என் நாய் அங்கு நின்று கொண்டிருந்தது.

416. ஷார்ட் (Short) என்பவர் அதற்கு விஷம் கொடுத்து கொன்ற போது, அவரைக் கொன்று பழிவாங்குவேன் என்று சபதம் செய்தேன். அப்பொழுது, எனக்கு ஏறக்குறைய பதினாறு வயதிருக்கும். துப்பாக்கியை எடுத்துக்கொண்டு காவல் நிலையத்திலேயே அவரைச் சுட்டுக்கொல்ல நான் புறப்பட்டபோது, என் தகப்பனார் என்னைத் தடுத்து விட்டார். நான் அந்த நாயின் கல்லறைக்குச் சென்று, எப்படியாவது அவரைக் கொன்று

பழிவாங்குவேனென்று சபதம் செய்தேன். நான் "ஃபிரிட்ஸ் (Fritz) நீ எனக்கு ஒரு தோழனைப் போலிருந்தாய். நான் பள்ளிக்கு செல்ல, என்னை கவனித்தாய். உனக்கு வயதாகும்போது, நான் உன்னைக் காப்பேன். ஆனால் இப்பொழுதோ உன்னைக் கொன்று விட்டார்களே. ஃபிரிட்ஸ் அவர் இனிமேல் உயிர்வாழ்வதில்லை என்று நான் உனக்கு வாக்களிக்கிறேன். அவர் வாழமாட்டார் என்று நான் உனக்கு வாக்கு கொடுக்கிறேன். அவர்மீது வண்டியை ஏற்றி கொன்று விடுவேன் என்று நான் நினைத்தேன். (என்றைக்காவது தெருவில் அவர் நடந்து செல்வதைப் பார்ப்பேன் அப்பொழுது) உனக்காக நான் அவரை கொல்வேன்" என்று இவ்விதமாய்க் கூறினேன்.

417. ஆனால் என்ன நேர்ந்தது தெரியுமா? அந்த மனிதனை நான் கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்தி, அவருக்கு இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தேன். அவர் மரித்தபோது அவர் உடலை அடக்கம் செய்தேன். ஆம், ஐயா. என்

நாயை அவர் விஷம் வைத்துக்கொன்ற சில வருடங்களுக்குள் நான் இரட்சிக்கப்பட்டேன். அதன்பின் நான் காரியங்களை வித்தியாசமாகக் கண்டேன். அப்பொழுது அவரை வெறுப்பதற்கு மாறாக அவரை சிநேகித்தேன்.

418. அங்கு ஃபிரிட்ஸ் (Fritz) என்னும் பெயர் கொண்ட என் நாய் என் கையை நக்கினவாறு நின்றுகொண்டிருந்தது. நான் பார்த்தேன்...

419. அதைக் கண்டபோது, என்னால் அழமுடியவில்லை. அங்கு எவரும் அழவே முடியாது. அங்கு எல்லோரும் மகிழ்ச்சியுற்றிருக்க வேண்டும். விசனம் என்பது அங்கு காணப்பட முடியாது. அங்கு எவரும் மரிக்கவும் முடியாது. ஏனெனில் அங்கு எல்லாம் ஜீவனாகவே அமைந்திருந்தது. பாருங்கள்? பாருங்கள்? அவ்வாறே எவரும் அங்கு வயோதிபப் பிராயத்தை அடைய முடியாது. எல்லோரும் வாலிபராகவே இருந்தனர். அது மிகவும் பரிபூரணமாயிருந்தது. ’ஓ, இது மிகவும்

அற்புதமல்லவா!' என்று நான் நினைத்தேன். இத்தகைய லட்சக்கணக்கானவர் மத்தியில் நானும் இருந்தேன். ஓ, என்னே! நான் உண்மையாக என் வீட்டில் இருந்தேன், பாருங்கள்.

420. அப்பொழுது அங்கு ஒரு சத்தம் கேட்டது. அது, 'நீ சிநேகித்த அனைவரையும், உன்னை மனப்பூர்வமாக சிநேகித்த அனைவரையும், தேவன் உனக்குக் கொடுத்திருக்கிறார்' என்றது. இது நான் செய்த ஊழியத்திற்கு தேவன் அளித்த பலன். ஆனால் எனக்கு எவ்வித பலனும் வேண்டாம்.

நான் 'கர்த்தருக்கு ஸ்தோத்திரம்' என்றேன்.

421. எனக்கு ஒரு விசித்திரமான உணர்ச்சி அப்பொழுது ஏற்பட்டது. அப்பொழுது நான் காரியம் என்ன? விசித்திரமாக உணர்கிறேன்" என்று நினைத்தேன். நான் திரும்பிப் பார்த்தபோது கட்டிலின் மேல் கிடந்திருந்த என் உடல் அசையத் தொடங்கினது. அப்பொழுது நான், 'ஓ, எனக்கு

இங்கிருந்து போவதற்கு மனதில்லை. என்னைப் போகவிட வேண்டாம்' என்றேன்.

422. ஆனால் சுவிசேஷம் மக்களுக்குப் பிரசங்கிக்கப்பட வேண்டும். ஒரு நொடிப்பொழுதில் நான் மறுபடியும் கட்டிலின் மேல் படுத்துக் கொண்டிருந்தேன்.

423. இந்த என் அனுபவம் 'வியாபாரிகளின் சத்தம்' (Business men's Voice) என்னும் பத்திரிக்கைளில் இரண்டு மாதங்களுக்கு முன்னர் அச்சடிக்கப்பட்டு உலகம் பூராவும் சென்றது. சகோ, நார்மன்– அவர் இக்கூட்டத்தில் இருக்கிறார் என்று நினைக்கிறேன். அவர் அதனை மொழிப் பெயர்த்து கைப்பிரதிகளாக அச்சடித்து விநியோகம் செய்தார். அது எல்லா இடங் களுக்கும் சென்றது. அநேக ஊழியர்கள் அதைக் குறித்து எனக்கு எழுதினார்கள். அவர்களில் அநேகர்...

424. அவைகளில் ஒன்றை நான் கூறட்டும். நூற்றுக்கணக்கானவர் எனக்கு எழுதினர். இதோ இது இவ்விதமாக இருந்தது,

“சகோதரன் பிரான்ஹாம், வியாபாரிகளின் சத்தம் என்னும் பத்திரிகையில் வந்த உங்களுடைய தரிசனம்...”

425. டாமி நிக்கலை (Tommy Nickel) நான் பாராட்டுகிறேன். அவர் இப்பொழுது வியாபாரிகள் சங்கத்தில் இல்லை. என்ன காரணமோ நான் அறியேன். திரித்துவக் கொள்கையைக் கடைபிடிக்கும் அந்த பத்திரிக் கையில் அவர், 'பவுல் இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்து அவ்விதம் செய்யக் கட்டளையிட்டுள்ளார். நானும் அதையே செய்துள்ளேன்' என்று நான் கூறியதை எவ்வித மாற்றமுமின்றி அப்படியே பிரசுரித்தார். அதன்பின் நான், “என்னே!” என்று யோசித்தேன்.

426. அந்த போதகர், “சகோதரன் பிரான்ஹாமே உங்கள் தரிசனம்...” என்று எழுதியிருந்தார்.

427. அவர் அதை தரிசனம் என்று குறிப்பிட்டிருந்தார். அது ஒருக்கால் தரிசனமாய் இருந்திருக்கலாம். நான் வானத்துக்கு எடுத்துக்

கொள்ளப்பட்டதாகக் கூற விரும்பவில்லை. **நான் முதலாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்டு இத்தகைய சம்பவங்களைக் கண்டேனானால், மூன்றாம் வானம் வரைக்கும் எடுக்கப்பட்ட பவுல் என்னவெல்லாம் கண்டிருப்பான்?** அது என்ன? அதைக் குறித்து மனிதர் பேசவும் கூடாது என்று அவன் கூறினான். எனக்கு நேர்ந்ததும் எடுக்கப்படுதலா என்னவென்பது எனக்குத் தெரியவில்லை. என்னால் சொல்ல முடியவில்லை. நான் அதை உங்களுக்கு கூறவும் முடியாது.

428. அதை வாசித்த ஒரு போதகர், "சகோ. பிரான்ஹாம் உங்கள் தரிசனம் பெரும்பாலும் வேதவாக்கியங்களுடன் ஒத்திருக்கின்றது. ஆனால் குதிரை அங்கு இருந்ததாக நீர் கூறுவது மாத்திரம் என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பரலோகம் மனிதருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளதேயன்றி குதிரைகளுக்கல்ல" என்று எழுதியிருந்தார். வேதத்தத்துவத்தினால் உண்டாகும் மனித ஞானத்தைப் பாருங்கள்.

429. நல்லது, நான் அங்கு சபையின் அலுவலகத்தில் அமர்ந்திருந்தேன். நான்கு அல்லது ஐந்து மாதங்களுக்கு முன்பு எனது மகன் பில்லி அந்தக் கடிதத்தை என்னிடம் கொண்டு வந்தான்.

430. நான் அந்த போதகருக்கு இவ்விதம் பதிலளித்தேன்; 'என் அருமை சகோதரனே, நீங்கள் வேதவாக்கியங்களைக் குறித்து கொண்டுள்ள அறிவைக் குறித்து அதிசயமுறுகிறேன். நான் பரலோகத்திலிருந்ததாகச் சொல்லவில்லை. பரதீசைப் போன்ற ஒரு ஸ்தலத்தில் இருந்ததாகவே நான் குறிப்பிட்டுள்ளேன். ஏனெனில் கிறிஸ்து அதற்கும் உயரமாயுள்ள ஒரு ஸ்தலத்தில் இருந்தார். உங்கள் சந்தேகம் தீரவேண்டுமானால், வெளிப்படுத்தல் 19-ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். இயேசு பரலோகத்திலிருந்து புறப்பட்டு வரும்போது வெள்ளைக் குதிரையின் மேல் ஏறிக்கொண்டு வருகிறார். (வெளி. 19:11-14). அது மாத்திரமல்ல. அவருடன் காணப்படும் பரிசுத்தவான்கள் அனைவரும் வெள்ளைக்

குதிரைகளின்மேல் காணப்படுகின்றனர் என்பதை அறியவும். சரி. முற்றிலும் சரி. ஆம், உண்மையாக.

431. அதே ஸ்தலத்தில்... கழுகைப் போன்ற ஜீவன், காளையைப் போன்ற ஜீவன் இருக்கின்றனவே... நல்லது, என்னே, எலியாவைக் கொண்டு சென்ற குதிரைகள் எங்கிருந்து வந்தன? மனித சிந்தை அதில் தவறு காண விழைவதைப் பாருங்கள். அது உண்மை.

432. இப்பொழுது கவனியுங்கள். இந்த அருமையான, தேவபக்தியுள்ள சகோதரன் யோவானைக் குறித்து நான் சற்று சிந்தித்துக் கொண்டிருந்தேன்... நான் முடிக்கும் முன்பாக இதைக் கூறுவதற்கு சரியான நல்ல இடம் இதுதான் என்று நான் சற்று யோசித்தேன். யோவான் கொஞ்ச காலம் துன்புறுத்தப்பட்டு அவனுடைய சகோதரரைக் காண அனுமதிக்கப்பட்டான். அவ்வாறே நானும் கர்த்தருடைய வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கும் என் சகோதரரையும் மற்ற பரிசுத்தவான்களையும் காண தேவனாகிய

கர்த்தர் அனுமதித்தார். கவனியுங்கள். நான் கண்ட என் ஜனங்கள் பரிசுத்தவான்கள் பலி செலுத்தப்படும் பீடத்தின் கீழ் இல்லை. ஆனால் ஐந்தாம் முத்திரையில் காணப்படும் ஆத்துமாக்கள் தாங்கள் கடைப்பிடித்திருந்த கொள்கைக்காக உயிர்த்தியாகம் செய்ததால், பலிபீடத்தின் (Altar of sacrifice) கீழ் காணப்படுகின்றனர்.

433. இப்பொழுது இதை நீங்கள் நன்கு கவனிக்க விரும்புகிறேன். இன்னும் பத்து நிமிடங்களுக்குள் சரியாக 10.00 மணிக்கு முடித்துவிடுகிறேன்.

434. கவனியுங்கள், கர்த்தர் எனக்குக் காண்பித்த மணவாட்டி பலிபீடத்தின் கீழ் காணப்படவில்லை. ஏனெனில் அவள் ஜீவனுள்ள வார்த்தை கிருபையாய் அளித்துள்ள மன்னிப்பை எற்றுக்கொண்டதன் விளைவாக வெள்ளையங்கியை கிறிஸ்துவினிடமிருந்து பெற்றுக் கொண்டாள். நான் நினைக்கவில்லை, திறக்கப்பட்டதால்...

435. ஐந்தாம் முத்திரை நமக்குத் திறக்கப்பட்டு விட்டதென நான் முற்றிலும் நம்புகிறேன். தேவனிடத்திலிருந்து நான் தெளிவான வெளிப்பாட்டைப் பெற்று அதை சுத்த மனச்சாட்சியுடன் உங்களுக்கு அளித்தேன். நான் அதை ஊகித்து உங்களுக்குப் போதிக்கவில்லை. எக்காலத்தும் நான் ஸ்தாபனங்களுக்கு விரோதமாயுள்ளவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். முத்திரைகள் திறக்கப்படுவதன் மூலம் அதன் உண்மை புலப்பட்டுவிட்டது.

436. வேறொரு காரியத்தையும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். இந்த ஐந்தாம் முத்திரை இந்த நாளில் திறக்கப்பட்டதனால், 'ஆத்துமாக்கள் உறங்குதல்' (Soul Sleeping) என்னும் போதகம் தவறென்பது ருசுவாகிட்டது. அப்போதகத்தை விசுவாசிப்பவர் சிலர் இங்குள்ளனர் என்று நானறிவேன். ஆனால் அது தவறென்பது இப்பொழுது நிரூபிக்கப்பட்டு விட்டது. அவர்கள் உறங்கிக் கொண்டிருக்கவில்லை. அவர்கள் உயிரோடுள்ளனர். சரீரங்கள் மாத்திரமே

கல்லறைகளில் உறங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவர்களுடைய ஆத்துமாக்கள் தேவ சமூகத்தில் பீடத்தின் கீழ் உயிரோடுள்ளன.

★★★★★

# தீர்க்கதரிசனம் 8

## 1933-ம் ஆண்டு சகோ.பிரான்ஹாமுக்கு கொடுக்கப்பட்ட ஆறாவது தரிசனம்



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

நான் கண்ட ஆறாம் தரிசனத்தில், மிகவும் அழகுள்ள ஒரு பெண் அமெரிக்காவில் தோன்றினாள், அவள் அழகிற் சிறந்திருந்தாலும், மிகவும் கொடூரமான குணம் படைத்தவளாயிருந்தாள். ரோமன் கத்தோலிக்க சபை அமெரிக்காவில் வளர்ந்து ஆதிக்கம் பெறுவதை இது குறிக்கிறது என்று நான் நம்புகிறேன்; இல்லையேல், அமெரிக்காவின் ஸ்திரீகள் ஓட்டுரிமை பெற்றதன் காரணமாக, ஒரு ஸ்திரீ அமெரிக்காவில் அரசியல் வல்லமை பெறுவதையும் இது குறிக்கலாம்.

*ஏழு சபை காலங்களின் வியாக்கியானம்*

66. "அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பெண் வழிபாடு வரும், அது மரியாளாக இருக்கும்." அதை நான்... 1931ல் கண்டேன். ஏழு சம்பவங்கள் நிகழ்ந்து விட்டன. நான் 1931ல் எழுதின இந்த தாள் இங்கே என்னிடம் உள்ளது, "எவ்வாறு ஜனாதிபதி ஃபிராங்க்ளின்

டி. ரூஸ்வெல்ட் முழு உலகமே யுத்தத்தில் ஈடுபட காரணமாயிருப்பார்” என்று நான் கூறினேன். நான் அப்படி கூறினபோது, யுத்தம் எதுவும் நடக்கவில்லை, அது பணக்கஷ்டக் காலமாயிருந்தது. நான், “வேறொரு காரியம்...” என்று கூறினேன். “டிமாக்ரட்” கோஷ்டியை முழுவதுமாக ஆதரித்த என் தாய், அப்படி நான் கூறினபோது, என்னை முறைத்துப் பார்த்தார்கள். நான், “அது ரிப்பப்ளிக்கன் அல்லது சோஷலிஸ்ட் கோஸ்டி அல்லது எந்த கோஷ்டியைச் சேர்ந்தவராயிருந்தாலும் சரி, இது **கர்த்தர் உரைக்கிறதாவது.** இப்படி அவர்கள் செய்வதனால், அவர்கள் பெண்கள் வோட்டு போட அனுமதிக்கின்றனர். அப்படி அவர்கள் செய்யும்போது, அது இந்த நாட்டுக்கு நேரிடும் மிகப்பெரிய அவமானமாயிருக்கும்” என்றேன். நான் மேலும், “அதன் பலனை அவர்கள் என்றாவது ஒரு நாள் அனுபவித்தேயாக வேண்டும்” என்றேன். சென்ற தேர்தலின்போது அப்படி

நடந்தது. இந்த ஜனாதிபதியை தேர்ந்தெடுத்தது பெண்களே.

**யேசபேல் மார்க்கம், மார்ச் 19, 1961**

68. ஜனங்களாகிய நீங்கள், அரசியலுக்காக, நீங்கள் ஒரு நல்ல “டிமாக்ரட்” என்பதற்காக அப்படிப்பட்ட ஒன்றுக்கு வோட்டு போட்டு, அமெரிக்கத்துவம், கிறிஸ்துவ மார்க்கம் என்னும் உங்கள் பிறப்புரிமைகளை விற்றுப்போட்டு, இந்த நாட்டுக்கு நாம் ஓடிவரக் காரணமாயிருந்த அந்த வேசியின் கையில் அதைக் கொடுத்தீர்கள். அவள் எவ்வளவு மெதுவாக உள்ளே நுழைகிறாள் என்பதைப் பாருங்கள். மிகவும் சுலபமாக. இப்பொழுது அவள் சிங்காசனத்தில் அமர்ந்திருக்கிறாள். நிச்சயமாக! வெள்ளை மாளிகை சிங்காசனத்தில் (White House throne).

**யேசபேல் மார்க்கம், மார்ச் 19,1961**

ஆகாப் யேசபேலுக்கு பெயரளவில் ராஜாவாயிருந்தான் (figurehead).

அவ்வளவுதான், பெயரளவில். அவன் தானாக ஒன்றையும் செய்ய மாட்டான். ஆனால் அவனுக்குப் பின்னால் உள்ள அந்த முறைமை அவனை அவ்வாறு செய்யத் தூண்டும். முற்றிலும் உண்மை! கிறிஸ்தவனே, உன் மனச்சாட்சியை தட்டி எழுப்பி, உறக்கத்தினின்று எழுந்திரு. நீ நினைப்பதைக் காட்டிலும் காலதாமதமாகி விட்டது.

**யேசபேல் மார்க்கம், மார்ச் 19,1961**

78. இஸ்ரவேல் எப்படி அந்த நிலையையடைந்தது என்று பாருங்கள். அது அலையோடு மிதந்து சென்று, முடிவில் யேசபேல் வந்தாள். அமெரிக்கா எவ்வாறு அந்த நிலையையடைந்தது என்று பாருங்கள், அது உலகமாகிய அலையுடன் மிதந்து சென்று, முடிவில் யேசபேல் சிம்மாசனத்தை கைப்பற்றி விட்டாள். அது உண்மை. உண்மையில் யேசபேல் இஸ்ரவேலின் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கவில்லை. ஆனால் அவளே சிம்மாசனத்துக்குப் பின்னால் இருந்த முக்கிய தலைவி.

அவ்வாறே கத்தோலிக்க குருக்களாட்சியும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கவில்லை, ஆனால் அதுவே அதற்கு பின்னால் உள்ள முறைமை. ஏனெனில் அவர் அவளை மணம் புரிந்து கொண்டிருக்கிறார். இந்த தேசத்தில் அவர்கள் “மிருகத்திற்கு ஒரு சொரூபம் பண்ணுவார்கள்” என்று வேதம் கூறுகிறது (வெளி13:14).

**யேசபேல் மார்க்கம், மார்ச் 19,1961**

ஒரு மனிதன் எழும்பி வெள்ளை மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்யும்போது, மதவழிபாட்டின் உரிமையை (Freedom of religion) அவர் நம்புவதாக ஆணையிட மறுக்கிறார்.

***********

எகிப்தில் ராமசேஸ் வளர்ந்து வந்தான். அவனுடைய ஆதிக்கமும் வளர்ந்து வந்தது. மாமிசபிரகாரமான ராமசேஸ் வளர்ந்து வந்தான். அதுபோன்று மாமிசபிரகாரமான

மனிதன், அந்திக் கிறிஸ்து, அரசியலின் மூலம் வளர்ந்து வருகிறான். அவன் ஏற்கனவே வெள்ளை மாளிகையில் நுழைந்து விட்டான்.

*மூன்றாம் யாத்திரை, ஜுன் 30, 1963*

279. இரும்புத்திரை(Iron Curtain) என்று ஒன்றுள்ளது; மூங்கில் திரை (Bamboo Curtain) என்று ஒன்றுள்ளது; இந்திர நீலத்திரை (Purple Curtain) என்று ஒன்றுள்ளது; சகோதரரே, நீங்கள் இந்திர நீலத்திரையைத் தவிர மற்றொன்றிற்கும் பயப்பட வேண்டாம். இந்திர நீலத்திரையை மாத்திரம் கவனித்துக்கொண்டு வாருங்கள். அது இன்றைக்கு இந்நாட்டிலேயே சிம்மாசனத்தில் அமர்ந்துள்ளது.

*மணவாட்டி மரம் திரும்ப அளிக்கப்படுதல், ஏப்ரல் 22, 1962*



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

...எந்த நேரத்திலும் பிசாசு உங்களை மேற்கொள்ள விரும்புவான். அவனுடைய ஆளுகைக்குள் உங்களைக் கொண்டு வர விரும்புவான். உங்களுடைய ஜெப வாழ்க்கையை முறித்துப் போடுவீர்களானால், சகோதரனே, நீ ஒன்றுமில்லாது ஆகிவிடுவாய். அது சரியா.

ஜீவனுக்காக தாகமாயிருத்தல், 57-0630, பத்தி எண் E-36

**இயேசுவை உங்கள் வீட்டை விட்டு புறம்பாக்குவீர்கள் என்றால், குடும்ப ஜெபத்தை நிறுத்துவீர்களானால், வேதாகமம் வாசிப்பதை நிறுத்துவீர்களானால், உங்கள் வீடுகளில் இன்னும் இதுபோன்ற காரியங்களைச் செய்வீர்கள் என்றால், உங்கள் வீடுகளில் பிரச்சனைகள் வருவதைப் பார்க்கலாம்.**

நீ இதை விசுவாசிக்கிறாயா?, 53-0906, பத்தி எண் E-72

**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

**...அவருக்கு முன்பாகச் சென்று அமைதியாயிருங்கள். துணி துவைப்பது அதைத் தடை செய்ய அனுமதியாதீர்கள். எந்த ஒரு வேலையும் அதை தடை செய்யாதிருப்பதாக. எதுவும் அதைத் தடை செய்ய அனுமதியாதீர்கள். நீ என்ன செய்கிறாய் என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ள இடங்கொடுக்காதீர்கள். அவருக்கு முன்பாக செல்லுங்கள். எங்காவது காடுகளுக்குச் செல்லுங்கள். சாலையின் பக்கவாட்டிற்குச் செல்லுங்கள். இரகசிய அறைக்குச் செல்லுங்கள். கதவை மூடுங்கள். குழந்தைகள் பள்ளிக்கூடத்தை சென்றடையும்போது. அங்கே கீழே உங்கள் முழங்கால்களை முடக்குவீர்களாக.**

அவருடைய சத்தத்திற்கு செவி கொடுங்கள், 58–1005 M, பத்தி எண் E-45

*Only believe,*
*Only believe*
*All things are possible,*
*Only believe.*


**சகோ. பினேகாஸ்**
**போன்: 8838623242,**
**9551855108**
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in